13275

AL/2021(2022)/33/T-I

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2021(2022)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2021(2022)
General Certificate of Education (Adv. Level) Examination, 2021(2022)

| | |
|---|---|
| ගිණුම්කරණය | I |
| கணக்கீடு | I |
| Accounting | I |

**33 T I**

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
Two hours

**அறிவுறுத்தல்கள் :**

※ எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
※ **1** தொடக்கம் **30** வரையுள்ள வினாக்களுக்குச் சரியான விடையைத் தெரிந்தெடுத்து, **அதன் இலக்கத்தை வினாவின் எதிரேயுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**
※ **31** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்களுக்குரிய சுருக்கமான விடையைப் **புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**
※ ஒவ்வொரு வினாவுக்கும் **சமமான** புள்ளிகள் உரித்தாகும்.
※ உங்கள் **சுட்டெண்ணை** மேலே கொடுக்கப்பட்டுள்ள கூட்டினுள் தெளிவாக எழுதுக.
※ **செய்நிரலாக்கத்தகா (Non - Programmable) கணிப்பான்கள் பயன்படுத்துவதற்கு அனுமதிக்கப்படும்.**

சுட்டெண் : ......................................

பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும்

| | ஒப்பம் | குறியீட்டெண் |
|---|---|---|
| 1 ஆம் பரீட்சகர் | | |
| 2 ஆம் பரீட்சகர் | | |
| மேலதிக பிரதம பரீட்சகர் | | |
| எண்கணிதப் பரிசோதகர் | | |
| பிரதம பரீட்சகர் | | |

| வினாத்தாள் I இற்கானது | |
|---|---|
| வினா இல. | புள்ளிகள் |
| 01 - 30 | |
| 31 - 50 | |
| மொத்தம் | |

**1.** பின்வரும் கூற்றுக்களுள் எது நிறுவனமொன்றின் கணக்கீட்டின் பிரதான நோக்கத்தை **மிகவும் சிறப்பாக** விபரிக்கின்றது?
(1) குறித்த காலப்பகுதியில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்களை அறிக்கையிடல்
(2) நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்குக் கொடுக்கல் வாங்கல்களைப் பதிவுசெய்தல்
(3) முகாமையாளர்களின் பயன்பாட்டுக்காகத் தகவல்களை வழங்குதல்
(4) மூலதனத்தை வழங்கியவர்களுக்காகப் பொதுநோக்க நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல்
(5) அக்கறையுடைய தரப்பினர் தீர்மானமெடுப்பதற்கான நிதி மற்றும் நிதிசாராத் தகவல்களை வழங்குதல் (......)

**2.** பின்வரும் கணக்கீட்டு எண்ணக்கருக்களுள் எது நிதிநிலைமைக் கூற்றுத் திகதியிலிருந்து 12 மாதங்களுக்குள் செலுத்தவேண்டிய நீண்டகாலக் கடன் ஒன்றின் பகுதியை நடைமுறைப் பொறுப்பாக வகைப்படுத்துவதற்கான அடிப்படையை வழங்குகின்றது?
(1) அட்டுறு (2) மாறாத்தன்மை (3) தொடர்ந்து இயங்குதல்
(4) இணைதல் (5) முன்னெச்சரிக்கை (......)

**3.** நிறுவனமொன்றிற்குச் சொந்தமான இயந்திரமொன்றின் மதிப்பிடப்பட்ட பயன்தரு ஆயுட்காலமானது 10 வருடங்களிலிருந்து 8 வருடங்களாக மீளமைக்கப்பட்டதுடன், இந்த மீளமைப்பிற்காக கணிக்கப்பட்ட பெறுமானத்தேய்வானது நடப்பாண்டு நிதிக்கூற்றுக்களில் இனங்காணப்பட்டுள்ளது. பின்வரும் கணக்கீட்டு எண்ணக்கருக்களுள் எது இந்த இனங்காணலுக்கான அடிப்படையை வழங்குகின்றது?
(1) பொருண்மை (2) இணைதல் (3) வரலாற்றுக்கிரயம்
(4) வெளிப்படுத்துகை (5) தோற்றத்திலும் பார்க்கக் கருத்து முக்கியம் (......)

● **4 தொடக்கம் 6 வரையான வினாக்களுக்கு விடையளிப்பதற்குப் பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.**

மங்களா PLC ஆனது நிர்வாக நடவடிக்கைகளுக்காக ரூ. 500 000 இற்கு அலுவலக உபகரணமொன்றை 01.03.2021 இல் கடனுக்குக் கொள்வனவு செய்தது. கம்பனி இந்த உபகரணத்தின் நிறுவுதலுக்காக 02.03.2021 இல் ரூ. 20 000 காசாகச் செலுத்தியது. அலுவலக உபகரணக் கடனானது 10 மாதாந்தச் சம தவணைக் கட்டணங்களாகச் செலுத்தப்படவேண்டும். ரூ. 10 000 வட்டி உள்ளடங்கிய முதலாம் தவணைக் கட்டணம் ரூ. 60 000 ஆனது 31.03.2021 இல் செலுத்தப்பட்டது.

**4.** பின்வரும் கணக்கீட்டுச் சமன்பாடுகளுள் எது இக் கொடுக்கல் வாங்கல்களின் **தேறிய விளைவை** 31.03.2021 இல் உள்ளவாறு பிரதிபலிக்கின்றது.

| | சொத்துக்கள் (ரூ.' 000) | = | பொறுப்புக்கள் (ரூ.' 000) | + | உரிமையாண்மை(ரூ.' 000) |
|---|---|---|---|---|---|
| (1) | +420 | | +440 | | –20 |
| (2) | +420 | | +450 | | –30 |
| (3) | +440 | | +440 | | 0 |
| (4) | +440 | | +450 | | –10 |
| (5) | +460 | | +470 | | –10 |

(......)

[பக். 2 ஐப் பார்க்க

**5.** 31.03.2021 இல் செலுத்திய முதலாவது கடன் தவணைக் கட்டணக் கொடுப்பனவினைப் பதிவுசெய்வதற்கான சரியான இரட்டைப்பதிவு எது?

| | கணக்கு | வரவு (ரூ' 000) | செலவு (ரூ' 000) |
|---|---|---|---|
| (1) | அலுவலக உபகரணக் கடன் | 50 | |
| | காசு | | 50 |
| (2) | அலுவலக உபகரணக் கடன் | 60 | |
| | காசு | | 60 |
| (3) | அலுவலக உபகரணக் கடன் | 50 | |
| | அலுவலக உபகரணம் | 10 | |
| | காசு | | 60 |
| (4) | அலுவலக உபகரணக் கடன் | 50 | |
| | வட்டிச் செலவுகள் | 10 | |
| | காசு | | 60 |
| (5) | அலுவலக உபகரணக் கடன் | 60 | |
| | வட்டிச் செலவுகள் | 10 | |
| | காசு | | 60 |
| | செலுத்த வேண்டிய வட்டி | | 10 |

(……)

**6.** அலுவலக உபகரணத்தின் கிரயத்தைப் பதிவுசெய்வதற்குப் பயன்படுத்தப்பட்ட மூல ஆவணமும்/ஆவணங்களும் மூலப் பதிவேடும்/பதிவேடுகளும் எவை?

| | மூல ஆவணம்/ஆவணங்கள் | மூலப் பதிவேடு/பதிவேடுகள் |
|---|---|---|
| (1) | கொள்வனவுப் பட்டியல் | கொள்வனவு நாளேடு |
| (2) | கொள்வனவுப் பட்டியல் | பொது நாளேடு |
| (3) | நாளேட்டு உறுதிச்சீட்டு | பொது நாளேடு |
| (4) | கொள்வனவுப் பட்டியலும் கொடுப்பனவு உறுதிச்சீட்டும் | கொள்வனவு நாளேடும் காசுக் கொடுப்பனவுகள் நாளேடும் |
| (5) | நாளேட்டு உறுதிச்சீட்டும் கொடுப்பனவு உறுதிச்சீட்டும் | பொது நாளேடும் காசுக் கொடுப்பனவுகள் நாளேடும் |

(……)

● **7 ஆம், 8 ஆம் வினாக்களுக்கு விடையளிப்பதற்குப் பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.**

நிறுவனமொன்று ரூ. 100 000 காசை முதலீடு செய்து 01.01.2021 இல் சில்லறை வணிகமொன்றை ஆரம்பித்தது. இந்நிறுவனம் பெறுமதிசேர் வரி (VAT) இற்காகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. கொள்வனவுகளிலும் விற்பனைகளிலும் 8% பெறுமதிசேர் வரி (VAT) உள்ளடங்குகின்றது. 31.01.2021 இல் முடிவடையும் மாத காலத்தில் பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெற்றிருந்தன.

- ✻ ரூ. 540 000 இற்குக் கடனுக்குப் பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டன.
- ✻ இப்பொருட்கள் அனைத்தும் ரூ. 648 000 கடனுக்கு விற்பனை செய்யப்பட்டன.
- ✻ கடன்பட்டோரிடமிருந்து ரூ. 500 000 பெறப்பட்டது.
- ✻ ரூ. 360 000 இற்கான கடன்கொடுத்தோருக்கு ரூ. 20 000 கழிவுடன் காசு கொடுத்துத் தீர்க்கப்பட்டது.

**7.** 31.01.2021 இல் முடிவடைந்த மாதத்துக்கான மொத்த இலாபமும் 31.01.2021 இல் உள்ளவாறான காசுக் கணக்கு மீதியும் யாது?

| | மொத்த இலாபம் (ரூ.' 000) | காசுக்கணக்கு மீதி (ரூ.' 000) |
|---|---|---|
| (1) | 100 | 160 |
| (2) | 100 | 240 |
| (3) | 100 | 260 |
| (4) | 108 | 160 |
| (5) | 108 | 260 |

(……)

**8.** 31.01.2021 இல் உள்ளவாறு வணிகத்தின் மொத்தப் பொறுப்புக்கள் மற்றும் உரிமையாண்மை யாது?

| | மொத்தப் பொறுப்புக்கள் (ரூ.' 000) | உரிமையாண்மை (ரூ.' 000) |
|---|---|---|
| (1) | 180 | 120 |
| (2) | 180 | 220 |
| (3) | 188 | 220 |
| (4) | 188 | 228 |
| (5) | 200 | 228 |

(……)

[பக். 3 ஐப் பார்க்க

**9.** மகிந்தன் வியாபாரம் ஒரு தனியுடமை வணிகமாகும். இந்நிறுவனத்தின் ஊழியர் சேமலாபநிதிக்கு (EPF) தொழில்தருநர் மற்றும் தொழிலாளர்களின் பங்களிப்புக்கள் முறையே 15%, 10% ஆகும். 31.03.2021 இல் முடிவடைந்த வருடத்துக்காக வணிகத்தால் செலுத்தப்பட்ட தேறிய சம்பளம் ரூ. 1 800 000 ஆகும். மொத்தச் சம்பளத்திலிருந்தான கழிப்பனவு EPF இற்கான ஊழியர் பங்களிப்பு மட்டுமே ஆகும்.
31.03.2021 இல் முடிவடைந்த வருடத்துக்கான சம்பளச் செலவு மற்றும் EPF செலவு எவை?

| | சம்பளச் செலவு (ரூ.' 000) | EPF செலவு (ரூ.' 000) |
|---|---|---|
| (1) | 1 800 | 270 |
| (2) | 1 800 | 300 |
| (3) | 2 000 | 300 |
| (4) | 2 000 | 500 |
| (5) | 2 400 | 360 |

(......)

**10.** ஒரு தனியுடமையான அருண் நிறுவனமானது 31.03.2021 இல் முடிவடைந்த வருடத்திற்கான மொத்த இலாபம் மற்றும் தேறிய இலாபமாக முறையே ரூ. 765 000, ரூ. 540 000 என அறிக்கையிட்டுள்ளது. இவ்வருடத்தில் ரூ. 65 000 இருப்பு நட்டம் ஏற்பட்டுள்ளது. இறுதியிருப்பானது 31.03.2021 இல் நிறுவனத்திலுள்ள பௌதீக இருப்புக்களின் அடிப்படையில் கணிக்கப்பட்டிருந்தது. எனினும், இருப்பு நட்டம் தொடர்பில் சீராக்கங்கள் கணக்குப் புத்தகங்களில் மேற்கொள்ளப்படவில்லை.
இருப்பு நட்டச் சீராக்கத்தின் பின்னரான சரியான மொத்த இலாபம் மற்றும் தேறிய இலாபம் எது?

| | மொத்த இலாபம் (ரூ.'000) | தேறிய இலாபம் (ரூ.'000) |
|---|---|---|
| (1) | 700 | 475 |
| (2) | 700 | 540 |
| (3) | 765 | 475 |
| (4) | 830 | 540 |
| (5) | 830 | 605 |

(......)

**11.** பின்வரும் தகவல்கள் 31.03.2021 இல் முடிவடைந்த வருடத்துக்கான ராணி வெதுப்பகத்தின் கணக்குப் புத்தகங்களிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டவையாகும்.

| | ரூ.' 000 |
|---|---|
| 01.04.2020 இல் மூலப்பொருள் இருப்பு | 100 |
| 31.03.2021 இல் மூலப்பொருள் இருப்பு | 70 |
| மூலப்பொருள் கொள்வனவுகள் | 130 |
| இவ்வருடத்தில் நடைமுறைவேலையில் அதிகரிப்பு | 15 |
| நேர்க்கூலிக்கிரயம் | 70 |
| உற்பத்தி அலகுகளின் மீதான இறைக் கொடுப்பனவுகள் | 30 |
| தொழிற்சாலை மேந்தலைகள் | 35 |

நடைமுறை வேலையானது மொத்த உற்பத்திக் கிரயத்தின் அடிப்படையில் மதிப்பிடப்படுகின்றது.
31.03.2021 இல் முடிவடைந்த வருடத்துக்கான மூலக் கிரயம் மற்றும் மொத்த உற்பத்திக் கிரயம் எது?

| | மூலக்கிரயம் (ரூ.'000) | மொத்த உற்பத்திக்கிரயம் (ரூ.'000) |
|---|---|---|
| (1) | 200 | 220 |
| (2) | 200 | 250 |
| (3) | 215 | 250 |
| (4) | 260 | 280 |
| (5) | 260 | 310 |

(......)

**12.** சுந்தர் வியாபாரமானது கணக்கீட்டுப் புத்தகங்களை முறையாகப் பேணுவதில்லை. பின்வரும் தகவல்கள் 31.03.2021 இல் முடிவடைந்த வருடத்துடன் தொடர்புடையவையாகும்.

| | ரூ.' 000 |
|---|---|
| 01.04.2020 இல் இருப்பு | 140 |
| 31.03.2021 இல் இருப்பு | 170 |
| விற்பனைகள் | 1 050 |
| கொள்வனவுத் திருப்பங்கள் | 50 |
| உட்சுமைக்கூலி | 40 |

More Past Papers at
tamilguru.lk

சுந்தர் வியாபாரமானது விற்பனை விலையில் 20% இலாபம் வைத்துப் பொருட்களை விற்பனை செய்கின்றது.
31.03.2021 இல் முடிவடைந்த வருடத்துக்கான கொள்வனவுகள் எது?

(1) ரூ. 840 000 (2) ரூ. 880 000 (3) ரூ. 915 000 (4) ரூ. 920 000 (5) ரூ. 955 000 (......)

[பக். 4 ஐப் பார்க்க

**13.** 'அன்புக் கரங்கள்' நலன்புரிச் சேவைகள் சங்கத்தின் 31.12.2020 இல் முடிவடைந்த வருடத்துக்கான பின்வரும் தகவல்கள் தரப்பட்டுள்ளன.

| விபரம் | ரூ.' 000 |
|---|---|
| 01.01.2020 இல் பெறவேண்டிய சந்தா | 192 |
| 01.01.2020 இல் முற்பணமாகப் பெற்ற சந்தா | 60 |
| நடைமுறை வருடத்தில் பெற்ற சந்தா: | |
| 2019 வருடத்திற்கானது | 144 |
| 2020 வருடத்திற்கானது | 1 092 |
| 2021 வருடத்திற்கானது | 108 |
| 31.12.2020 இல் பெறவேண்டிய சந்தா | 96 |

31.12.2020 இல் முடிவடைந்த வருடத்திற்காக இனங்காணப்பட்ட சந்தா வருமானம்:

(1) ரூ. 1 092 000 (2) ரூ. 1 200 000 (3) ரூ. 1 308 000
(4) ரூ. 1 344 000 (5) ரூ. 1 488 000 (……)

**14.** 1890 ஆம் ஆண்டு பங்குடமைக் கட்டளைச் சட்டத்தின் 24 ஆம் பிரிவுக்கமைய பின்வரும் கூற்றுக்களில் எவை சரியானவை?

A - பங்காளர் பங்குடமைக்கு வழங்கிய கடன்களுக்கு 5% வருடாந்த வட்டிக்கு உரித்துடையவராவர்.

B - இளைப்பாறலின்போது செலுத்தவேண்டிய தொகையானது நிலுவையாக இருக்குமாயின் அதற்கு 5% வருடாந்த வட்டிக்குப் பங்காளர் உரித்துடையவராவர்.

C - பங்காளர் முகாமைக்குத் தமது பங்களிப்பை வழங்கும்போது சம்பளங்களைப் பெற உரித்துடையவராவர்.

D - பங்காளர் தமது சொந்த நிதியிலிருந்து பங்குடமைக்கான செலவினைச் செய்திருப்பின் அதனை மீளப்பெறுவதற்கு உரித்துடையவராவர்.

(1) A, C மாத்திரம் (2) A, D மாத்திரம் (3) B, C மாத்திரம்
(4) A, B, D மாத்திரம் (5) B, C, D மாத்திரம் (……)

● **15 ஆம், 16 ஆம் வினாக்களுக்கு விடையளிப்பதற்குப் பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.**

அமலனும் சயனனும் இலாப நட்டங்களை முறையே 3 : 2 என்ற விகிதத்தில் பகிர்ந்து பங்குடமை ஒன்றை நடாத்திச் சென்றனர். 31.03.2020 இலுள்ளவாறான அவர்களது மூலதனம் மற்றும் நடைமுறைக் கணக்குகளின் மீதிகள் பின்வருமாறு இருந்தன.

| | அமலன் (ரூ.'000) | சயனன் (ரூ.'000) |
|---|---|---|
| மூலதனக் கணக்கு மீதி | 300 | 200 |
| நடைமுறைக் கணக்கு மீதி | 60 | 50 |

பங்காளர்களுக்குச் சம்பளங்கள் மற்றும் மூலதன வட்டி செலுத்தப்படுவதில்லை. 31.03.2021 இல் மைலன் என்பவர் பங்குடமையின் புதிய பங்காளராக அனுமதிக்கப்பட்டார். மைலன் மூலதனமாக ரூ. 500 000 ஐ பங்களிப்புச் செய்துள்ளார். அமலன், சயனன், மைலன் ஆகியோருக்கிடையே புதிய இலாபநட்ட விகிதமானது முறையே 3 : 2 : 1 ஆகும். 31.03.2021 இல் முடிவடைந்த வருடத்துக்கான பங்குடமையின் தேறிய இலாபம் ரூ. 150 000 ஆகும். பங்குடமையின் நன்மதிப்பானது பங்காளர்களின் மூலதனக் கணக்குகளினூடாகச் சீராக்கம் செய்யப்படுகின்றது. இவ்வருடத்தில் பற்றுக்கள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

31.03.2021 இல் பங்காளர்களின் மூலதனக் கணக்கு மீதிகள் (நன்மதிப்பு மற்றும் மைலனின் மூலதனத்திற்கான பங்களிப்புச் சீராக்கத்தின் பின்னர்) பின்வருமாறு இருந்தன.

| பங்காளர் | அமலன் | சயனன் | மைலன் |
|---|---|---|---|
| மீதி (ரூ.'000) | 330 | 220 | 450 |

**15.** 31.03.2021 இல் பங்குடமையின் மதிப்பீடு செய்யப்பட்ட நன்மதிப்பு எது?

(1) ரூ. 50 000 (2) ரூ. 250 000 (3) ரூ. 300 000
(4) ரூ. 500 000 (5) ரூ. 750 000 (……)

[பக். 5 ஐப் பார்க்க

**16.** 31.03.2021 இல் பங்குடமையின் உரிமையாண்மை மற்றும் அமலனின் நடைமுறைக் கணக்கு மீதி எது?

| | **உரிமையாண்மை (ரூ.'000)** | **அமலனின் நடைமுறைக் கணக்கு மீதி (ரூ.'000)** |
|---|---|---|
| (1) | 1 000 | 135 |
| (2) | 1 000 | 150 |
| (3) | 1 235 | 135 |
| (4) | 1 260 | 110 |
| (5) | 1 260 | 150 |

(......)

**17.** பின்வரும் காரணிகளில் எது நிறையிடப்பட்ட சராசரிக் கிரய முறையின்படி கணிக்கப்பட்ட அலகொன்றிற்கான இருப்புக் கிரயத்தில் தாக்கத்தினை ஏற்படுத்துகின்றது?

A - கொள்வனவு விலை B - கொள்வனவு செய்யப்பட்ட தொகை
C - வழங்கப்பட்ட தொகை D - ஆரம்ப இருப்பின் கிரயம்

(1) A, B ஆகியன மாத்திரம் (2) A, C ஆகியன மாத்திரம் (3) C, D ஆகியன மாத்திரம்
(4) A, B, D ஆகியன மாத்திரம் (5) A, B, C, D ஆகிய எல்லாம் (......)

**18.** மதுரா PLC ஆனது 01.04.2016 இல் ஆரம்பிக்கப்பட்டது. கம்பனியானது 31.03.2019 இல் முதல்தடவையாக அதன் காணிகளை மீள்மதிப்பீடு செய்தது. இதன் விளைவாக ரூ. 500 000 மிகையொன்று ஏற்பட்டது. மேலும் 31.03.2021 இல் காணிகள் மீண்டும் மீள்மதிப்பீடு செய்யப்பட்டன. இதன் விளைவாக ரூ. 300 000 பற்றாக்குறை ஏற்பட்டது. மேலும் இக்கம்பனி 31.03.2021 இல் முதல் தடவையாக அதன் அலுவலக உபகரணங்களை மீள்மதிப்பீடு செய்தது. இதன் விளைவாக ரூ. 800 000 பற்றாக்குறை ஏற்பட்டது.
LKAS 16 (ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்) இன்படி 31.03.2021 இல் ஏற்பட்ட மீள்மதிப்பீட்டுக் குறைகளுக்கான சரியான கணக்கீட்டுச் செயன்முறை:

(1) இலாபம் அல்லது நட்டத்தில் ரூ. 1 100 000 இனங்காணல்
(2) ஏனைய முற்றுமடங்கிய வருமானத்தில் ரூ. 1 100 000 இனங்காணல்
(3) இலாபம் அல்லது நட்டத்தில் ரூ. 300 000 மற்றும் ஏனைய முற்றுமடங்கிய வருமானத்தில் ரூ. 800 000 இனங்காணல்
(4) இலாபம் அல்லது நட்டத்தில் ரூ. 600 000 மற்றும் ஏனைய முற்றுமடங்கிய வருமானத்தில் ரூ. 500 000 இனங்காணல்
(5) இலாபம் அல்லது நட்டத்தில் ரூ. 800 000 மற்றும் ஏனைய முற்றுமடங்கிய வருமானத்தில் ரூ. 300 000 இனங்காணல் (......)

**19.** LKAS 37 (ஏற்பாடுகள், நிகழத்தக்க பொறுப்புக்கள் மற்றும் நிகழத்தக்க சொத்துக்கள்) இன்படி பின்வரும் எந்த நிலைமை/நிலைமைகளில் கம்பனியின் நிதிநிலைமைக் கூற்றில் ஏற்பாடொன்று இனங்காணப்படுகின்றது?

A - ஒரு வருட உத்தரவாதத்துடன் பொருட்கள் விற்பனை
B - ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பெறுமானத் தேய்வு
C - கடந்த கால நடைமுறைக்கமைய விற்பனை செய்யப்பட்ட குறைபாடுடைய பொருட்களைத் திருத்துவதற்குப் பொறுப்பேற்றல்

(1) A மாத்திரம் (2) B மாத்திரம் (3) A, B ஆகியன மாத்திரம்
(4) A, C ஆகியன மாத்திரம் (5) A, B, C ஆகிய எல்லாம் (......)

**20.** பின்வரும் நிலைமைகளில் எது/எவை LKAS 8 (கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகளின் மீதான மாற்றங்கள் மற்றும் வழுக்கள்) இன்படி கணக்கீட்டுக் கொள்கைகளின் மீதான மாற்றம் ஒன்றாகக் கருதப்படுகின்றது?

A - பெறுமானத்தேய்வு முறையினை நேர்கோட்டு முறையிலிருந்து குறைந்து செல்லும் மீதி முறையாக மாற்றல்
B - இருப்பு மதிப்பீட்டில் பயன்படுத்தப்படும் கிரயச் சூத்திரத்தினை நிறையிடப்பட்ட சராசரிக் கிரய முறையிலிருந்து முதல்-உள்-முதல்-வெளி (FIFO) முறையாக மாற்றல்
C - ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் வகையின் அளவீட்டு அடிப்படையினைக் கிரய மாதிரியிலிருந்து மீள்மதிப்பீட்டு மாதிரியாக மாற்றல்

(1) A மாத்திரம் (2) B மாத்திரம் (3) A, B ஆகியன மாத்திரம்
(4) B, C ஆகியன மாத்திரம் (5) A, B, C ஆகிய எல்லாம் (......)

**21.** றொசான் PLC ஆனது 01.04.2020 இல் 4 வருட காலப்பகுதிக்கு மோட்டார் வாகனம் ஒன்றின் பாவனை உரிமையைப் பெற்றுக்கொள்வதற்கான குத்தகை உடன்படிக்கையொன்றைச் செய்தது. இத்திகதியில் ஆரம்ப வைப்பாக ரூ. 1 500 000 செலுத்தப்பட்டது. இத்திகதியில் குத்தகைப் பொறுப்பின் ஆரம்ப மதிப்பீடாக ரூ. 3 500 000 காணப்பட்டது. குத்தகை உடன்பாட்டின்படி, சொத்தின் சட்டரீதியான உடமையானது குத்தகையின் இறுதியில் றொசான் PLC இற்கு மாற்றப்படுகின்றது. மோட்டார் வாகனத்தின் பயன்தரு ஆயுட்காலம் 5 வருடங்களாகும்.
SLFRS 16 (குத்தகைகள்) இன்படி 31.03.2021 இல் முடிவடைந்த வருடத்துக்கான இந்த மோட்டார் வாகனத்தின் பெறுமானத்தேய்வு யாது?

(1) ரூ. 400 000 (2) ரூ. 700 000 (3) ரூ. 875 000
(4) ரூ. 1 000 000 (5) ரூ. 1 250 000 (......)

● **22 ஆம், 23 ஆம் வினாக்களுக்கு விடையளிப்பதற்குப் பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.**

01.04.2020 இல் சமந்தா PLC இன் கூறப்பட்ட சாதாரண பங்கு மூலதனமும் நிறுத்திவைத்த வருவாயும் முறையே ரூ. 8 000 000, ரூ. 2 000 000 ஆக இருந்தது. 31.03.2021 இல் முடிவடைந்த வருடத்துக்கான இக்கம்பனியின் இனங்காணப்பட்ட மொத்த வருமானமும் மொத்தச் செலவுகளும் முறையே ரூ. 3 000 000, ரூ. 1 800 000 ஆக இருந்தது. இவ்வருடத்துக்கான இனங்காணப்பட்ட மொத்தச் செலவுகளானவை இயந்திரத்தை இரண்டாவது தடவையாக மீள்மதிப்பீடு செய்தபொழுது ஏற்பட்ட பற்றாக்குறை ரூ. 600 000 ஐயும் உள்ளடக்கியுள்ளது. இவ்வியந்திரம் 31.03.2018 இல் முதல் தடவையாக மீள்மதிப்பீடு செய்யப்பட்டபோது ரூ. 400 000 மிகை ஏற்பட்டிருந்தது. நடப்பாண்டுக் காலத்தில் இடைக்காலப் பங்குலாபங்களாக ரூ. 500 000 செலுத்தப்பட்டிருந்ததுடன் 01.05.2021 இல் இயக்குநர்கள் சபையானது இறுதிப் பங்குலாபங்களாக ரூ. 800 000 ஐச் செலுத்துவதற்குப் பிரேரித்திருந்தது. இவ்வருடத்தில் பங்கு மூலதனத்தில் மாற்றங்கள் எதுவும் ஏற்படவில்லை.

**22.** 31.03.2021 இல் முடிவடைந்த வருடத்திற்கான இலாபமும் மொத்த முற்றுமடங்கிய வருமானமும்:

| | **வருடத்திற்கான இலாபம் (ரூ.'000)** | **மொத்த முற்றுமடங்கிய வருமானம் (ரூ.'000)** |
|---|---|---|
| (1) | 800 | 1 200 |
| (2) | 1 200 | 800 |
| (3) | 1 200 | 1 600 |
| (4) | 1 600 | 1 200 |
| (5) | 1 800 | 1 200 |

(……)

**23.** 31.03.2021 இல் உள்ளவாறான நிறுத்திவைத்த வருவாய்களும் உரிமையாண்மையும்:

| | **நிறுத்திவைத்த வருவாய்கள் (ரூ.'000)** | **உரிமையாண்மை (ரூ.'000)** |
|---|---|---|
| (1) | 2 300 | 10 300 |
| (2) | 2 700 | 10 700 |
| (3) | 3 100 | 11 100 |
| (4) | 3 300 | 11 300 |
| (5) | 3 600 | 11 100 |

(……)

● **24 ஆம், 25 ஆம் வினாக்களுக்கு விடையளிப்பதற்குப் பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.**

பின்வரும் தகவல்கள் 01.04.2020 இல் ஆரம்பிக்கப்பட்ட தினேஷ் PLC யுடன் தொடர்புடையவையாகும்:

| **31.03.2021 இல் முடிவடைந்த வருடத்துக்கானது :** | **ரூ.' 000** |
|---|---|
| வரிக்கு முன் இலாபம் | 1 080 |
| வருடத்திற்கான வருமானவரி | 80 |
| வட்டிச் செலவுகள் | 160 |
| சாதாரண பங்குதாரர்களுக்குச் செலுத்திய பங்குலாபங்கள் | 300 |
| **31.03.2021 இல் உள்ளவாறு உரிமையாண்மை :** | |
| கூறப்பட்ட மூலதனம் - சாதாரண பங்குகள் (ஒவ்வொன்றும் ரூ. 20 வீதம்) | 10 000 |
| நிறுத்தி வைத்த வருவாய்கள் | 700 |

**24.** தினேஷ் PLC இன் பங்கொன்றுக்கான உழைப்பும் பங்கொன்றுக்கான பங்குலாபமும் :

| | **பங்கொன்றுக்கான உழைப்பு (ரூ.)** | **பங்கொன்றுக்கான பங்குலாபம் (ரூ.)** |
|---|---|---|
| (1) | 1.68 | 0.03 |
| (2) | 2.00 | 0.03 |
| (3) | 2.00 | 0.60 |
| (4) | 2.16 | 0.03 |
| (5) | 2.16 | 0.60 |

(……)

**25.** தினேஷ் PLC இன் உரிமையாண்மை மீதான திரும்பல் விகிதமும் வட்டிக்காப்பு விகிதமும் :

| | **உரிமையாண்மை மீதான திரும்பல் விகிதம் (%)** | **வட்டிக்காப்பு விகிதம் (தடவைகள்)** |
|---|---|---|
| (1) | 9.09 | 6.25 |
| (2) | 9.35 | 6.75 |
| (3) | 9.35 | 7.75 |
| (4) | 10.00 | 6.25 |
| (5) | 10.00 | 7.75 |

(……)

[பக். 7 ஐப் பார்க்க

**26.** கிரய வகைப்படுத்தலுடன் தொடர்புடைய பின்வரும் கூற்றுக்களில் எது/எவை **சரியானது/சரியானவை?**

A - எல்லா நேர்க்கிரயங்களும் மாறுங்கிரயங்கள்

B - எல்லா நேரில் கிரயங்களும் நிலையான கிரயங்கள்

C - எல்லா மேந்தலைகளும் நேரில் கிரயங்கள்

D - எல்லா நேர்க்கிரயங்களும் உற்பத்திக்கிரயங்கள்

(1) A மாத்திரம் (2) C மாத்திரம் (3) A, B ஆகியன மாத்திரம்
(4) C, D ஆகியன மாத்திரம் (5) B, C, D ஆகியன மாத்திரம் (……)

**27.** உற்பத்தி வணிகமொன்றினால் பயன்படுத்தப்படும் மூலப்பொருள் ஒன்றின் மறுகட்டளையிடும் மட்டமும் மறுகட்டளைத் தொகையும் முறையே 2 000 கிலோகிராமும் 5 000 கிலோகிராமும் ஆகும். இம்மூலப்பொருளின் ஆகக் குறைந்த நுகர்வு வாரமொன்றுக்கு 200 கிலோகிராம் ஆகும். இம்மூலப்பொருளின் ஆகக்குறைந்த மற்றும் ஆகக்கூடிய விநியோகக் காலம் முறையே 3 வாரங்கள், 5 வாரங்கள் ஆகும்.
இம்மூலப்பொருளின் ஆகக்கூடிய இருப்பு மட்டம்:

(1) 5 000 கிலோகிராம் (2) 5 800 கிலோகிராம் (3) 6 100 கிலோகிராம்
(4) 6 400 கிலோகிராம் (5) 7 000 கிலோகிராம் (……)

**28.** கிரய அலகொன்றுக்கான மேந்தலைகளை அடையாளங்காணும்போது பின்பற்றப்படும் படிமுறைகள் கீழே தரப்பட்டுள்ளன. இப்படிமுறைகளின் **சரியான** ஒழுங்கு வரிசை யாது?

A - மேந்தலை ஒதுக்கீடு B - மேந்தலை சேகரிப்பு
C - மேந்தலை உறிஞ்சல் D - மேந்தலை பகிர்வு

(1) A, B, C, D (2) A, B, D, C (3) B, A, C, D
(4) B, A, D, C (5) C, D, A, B (……)

**29.** கம்பனி ஒன்றின் சமப்பாட்டுப் புள்ளி 6 000 அலகுகளாகும். அலகு ஒன்றுக்கான விற்பனை விலையும் மொத்த நிலையான கிரயமும் முறையே ரூ. 200, ரூ. 480 000 ஆகும்.
அலகு ஒன்றுக்கான மாறும் கிரயம் மற்றும் 8 000 அலகுகளை விற்பனை செய்யும்போது கம்பனியின் இலாபம்:

| | அலகு ஒன்றிற்கான மாறும் கிரயம் (ரூ.) | இலாபம் (ரூ.) |
|---|---|---|
| (1) | 80 | 160 000 |
| (2) | 80 | 480 000 |
| (3) | 120 | 160 000 |
| (4) | 120 | 240 000 |
| (5) | 120 | 480 000 |

(……)

**30.** அசுரன் PLC ஆனது புதிய செயற்றிட்டமொன்றிற்காக இயந்திரம் ஒன்றைக் கொள்வனவு செய்ய எண்ணியுள்ளது. இப்புதிய இயந்திரத்தின் கொள்வனவு விலை ரூ. 3 000 000 ஆகும். அதன் எதிர்பார்க்கப்பட்ட பயன்தரு ஆயுட்காலமும் எஞ்சிய பெறுமதியும் முறையே 5 வருடங்கள், ரூ. 500 000 ஆகும். இச்செயற்றிட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட வரிக்குப் பின்னரான வருடாந்த இலாபம் பின்வருமாறு:

| வருடம் | 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|---|
| வரிக்குப் பின்னரான இலாபம் (ரூ.'000) | 250 | 750 | 500 | 1 000 | 1 000 |

இச்செயற்றிட்டத்தின் திரும்பப்பெறும் காலம்:

(1) 2.5 வருடங்கள் (2) 3 வருடங்கள் (3) 4 வருடங்கள்
(4) 4.5 வருடங்கள் (5) 5 வருடங்கள் (……)

[பக். 8 ஐப் பார்க்க

● **31 தொடக்கம் 50 வரையான வினாக்களுக்குச் சுருக்கமான விடையைப் புள்ளிக்கோடுகளின் மீது எழுதுக.**

**31.** வணிகமொன்றின் கணக்கீட்டுடன் தொடர்புடைய பின்வரும் கூற்றுகள் சரியா **(T)** அல்லது **பிழையா (F)** எனக் குறிப்பிடுக.

| கூற்று | சரி/பிழை |
|---|---|
| A - இலாப நோக்குடன் நடத்தப்படும் ஒவ்வொரு வணிகமும் கணக்கீட்டு நியமங்களின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் வேண்டும். | ................. |
| B - பொதுநோக்க நிதிக்கூற்றுக்களானவை முதலில் வணிகமொன்றின் நிதி வழங்குநர்களின் தகவல் தேவைகளில் கவனம் செலுத்தித் தயாரிக்கப்படுகின்றன. | ................. |
| C - வணிகமொன்றின் நிதி அறிக்கைகளின் உள்ளடக்கமானது வணிகத்தில் தாக்கத்தினை ஏற்படுத்தும் சூழல் காரணிகளில் ஏற்படும் மாற்றங்களைப் பொறுத்து மாற்றமடையும். | ................. |
| D - கொடுக்கல் வாங்கல்களை அடையாளம் காணுதல் என்பது வணிகமொன்றின் கணக்கீட்டுச் செய்முறையின் ஆரம்பப்படி ஆகும். | ................. |

**32.** தேங்காய் எண்ணெய் உற்பத்தி வணிகமொன்றின் பின்வரும் கொடுக்கல் வாங்கல்களானவை கணக்கீட்டுச் சமன்பாட்டில் காணப்படும் உரிமையாண்மை மீதியின் மீது **அதிகரிப்பினை, குறைவினை அல்லது மாற்றமின்மையை** ஏற்படுத்துமா எனக் குறிப்பிடுக.

| கொடுக்கல் வாங்கல் | உரிமையாண்மை மீதான தாக்கம் (அதிகரிக்கும் / குறையும் / மாற்றமில்லை) |
|---|---|
| A - தேங்காய்கள் கடனுக்குக் கொள்வனவு | ........................................ |
| B - இலாபத்துடன் தேங்காய் எண்ணெய் கடனுக்கு விற்பனை | ........................................ |
| C - தேங்காய் விநியோகத்தர்களுக்கு கழிவுடன் காசுக் கொடுப்பனவு | ........................................ |
| D - உரிமையாளர் தனது தனிப்பட்ட பாவனைக்குத் தேங்காய் எண்ணெயைப் பெற்றுக்கொள்ளல் | ........................................ |

**33.** மதுரா அரிசி ஆலையில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் ஒவ்வொன்றினையும் பதிவதற்குப் பயன்படுத்தப்படும் மூலப்பதிவேட்டினைக் குறிப்பிடுக.

| கொடுக்கல் வாங்கல் | மூலப் பதிவேடு |
|---|---|
| A - விவசாயிகளிடம் காசுக்கு நெல் கொள்வனவு | ........................... |
| B - அரிசி செய்முறைப்படுத்தும் இயந்திரமொன்றின் கடன் கொள்வனவு | ........................... |
| C - மொத்த வியாபாரிகளுக்குக் கடனுக்கு அரிசி விற்பனை | ........................... |
| D - மிருக உணவு உற்பத்தியாளர்களுக்குக் கடனுக்கு உடைந்த அரிசி விற்பனை | ........................... |

**34.** 31.03.2021 இல் உள்ளவாறு வணிகமொன்றின் கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி ரூ. 560 000 ஆக இருந்தது. இது இத்திகதியில் கடன்பட்டோர் பேரேட்டு மீதிகளின் மொத்தத்துடன் இணங்கவில்லை. தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட பரிசீலனையில் பின்வருவன வெளிப்படுத்தப்பட்டன.

- கடன்பட்டோர் பேரேட்டில் அறவிடமுடியாக்கடனாகப் பதிவளிக்கப்பட்ட ரூ. 20 000 ஆனது கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கில் பதியப்பட்டிருக்கவில்லை.
- ரூ. 42 000 விற்பனைப் பட்டியல் ஒன்று விற்பனை நாளேட்டில் ரூ. 24 000 ஆகப் பதியப்பட்டிருந்தது. எனினும் இது கடன்பட்டோர் பேரேட்டில் சரியாகப் பதியப்பட்டிருந்தது.

31.03.2021 இல் உள்ளவாறு பின்வருவனவற்றை அடையாளங்காண்க :

(அ) மேற்படி வழுக்களைத் **திருத்துவதற்கு முன்னர்** கடன்பட்டோர் பேரேட்டு மீதிகளின் மொத்தம்

: ரூ. ......................................................

(ஆ) மேற்படி வழுக்களைத் **திருத்திய பின்னர்** கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கின் திருத்திய மீதி

: ரூ. ......................................................

[பக். 9 ஐப் பார்க்க

**35.** கீழே தரப்பட்டுள்ள 'அம்மு' வியாபாரத்தின் பின்வரும் வருமானக்கூற்றில் A, B, C மற்றும் D என்ற ஆங்கில எழுத்துக்களால் குறித்துக்காட்டப்படும் ஒவ்வொரு விடயத்திற்கும் பிரயோகிக்கக்கூடிய கணக்கீட்டு எண்ணக்கருவை அடையாளங்காண்க.

'அம்மு வியாபாரம்' ⟵ A

31.03.2021 இல் முடிவடையும் வருடத்திற்கான வருமானக்கூற்று ⟵ B

**ரூ.'000** ⟵ C

| | | |
|---|---|---|
| விற்பனைகள் | XXXX | } ⟵ D |
| விற்பனைக்கிரயம் | (XXX) | |
| மொத்த இலாபம் | XXX | |

A ................................................ B ................................................

C ................................................ D ................................................

**36.** தனியுடமை வியாபாரம் ஒன்றின் கணக்கீடு தொடர்பில் பின்வரும் ஒவ்வொரு கூற்றும் சரியா (**T**) அல்லது பிழையா (**F**) எனக் குறிப்பிடுக.

| | கூற்று | சரி/பிழை |
|---|---|---|
| A - | வணிகத்தின் இலாபமானது காசுப்பற்றுக்களாகப் பகிர்ந்தளிக்கப்படலாம். | ............ |
| B - | உரிமையாளருக்கு விற்கப்பட்ட பொருட்கள், வணிகத்தின் விற்பனையாகக் கணக்கீடு செய்யப்படுகின்றன. | ............ |
| C - | பொருட்கள் நன்கொடையானது வணிகத்தின் செலவாக இனங்காணப்படல் வேண்டும். | ............ |
| D - | கொடுக்கல் வாங்கல்கள் காசு அடிப்படையில் பதியப்படும்போது வருமானக்கூற்று தயார் செய்யப்பட வேண்டியதில்லை. | ............ |

**37.** தனியுடமையான பிரியா வியாபாரமானது 'விற்பனை இன்றேல் திருப்புக' என்ற அடிப்படையில் பொருட்களை விற்பனை செய்கிறது. முகவருக்குப் பொருட்கள் அனுப்பப்பட்ட திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் விற்பனை செய்யப்படாத பொருட்களைத் திருப்பியனுப்ப வேண்டும். 15.03.2021 இல் ரூ. 500 000 கிரயமான பொருட்கள் முகவர் ஒருவருக்கு அனுப்பப்பட்டது. இப்பொருட்களின் விற்பனை விலை ரூ. 700 000 ஆகும். இம்முகவரால் 31.03.2021 வரை 60% ஐ மட்டுமே விற்பனை செய்யக்கூடியதாக இருந்தது. 31.03.2021 இல் உள்ளவாறு முகவரிடமிருந்த இருப்பின் தேறிய தேறக்கூடிய பெறுமதி ரூ. 210 000 ஆகும்.
பிரியா வியாபாரத்தின் மேற்படி கொடுக்கல் வாங்கல் தொடர்பில் பின்வருவனவற்றைக் குறிப்பிடுக.

(அ) 31.03.2021 இல் முடிவடைந்த மாதத்துக்கான விற்பனை வருமானம் : ரூ ....................

(ஆ) 31.03.2021 இல் உள்ளவாறு நிதிநிலைமைக்கூற்றில் அறிக்கையிடப்பட்ட இருப்பின் பெறுமதி : ரூ ....................

● **38 ஆம், 39 ஆம் வினாக்களுக்கு விடையளிப்பதற்குப் பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.**

மதனும் சுதனும் இலாபநட்டங்களைச் சமமாகப் பகிர்ந்து பங்குடமையொன்றை நடாத்தி வந்தனர். 01.04.2020 இல் ஏரன் ஒரு பங்காளனாக அனுமதிக்கப்பட்டார். அவர் மூலதனம் மற்றும் நன்மதிப்புப் பங்கு ஆகிய இரண்டுக்குமாகக் காசைக் கொண்டுவந்தார். இத்திகதியில் பங்குடமையின் நன்மதிப்பு ரூ. 1 000 000 ஆக மதிப்பிடப்பட்டிருந்தது. பங்குடமையின் நன்மதிப்பானது பங்காளர் மூலதனக் கணக்குகளினூடாகச் சீராக்கப்படுகின்றது. மதன், சுதன், ஏரன் ஆகியோருக்கிடையிலான இலாபநட்டப் பகிர்வு விகிதம் முறையே 5 : 3 : 2 என இணங்கிக்கொள்ளப்பட்டது. மேலதிக தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | மதன் (ரூ.'000) | சுதன் (ரூ.'000) | ஏரன் (ரூ.'000) |
|---|---|---|---|
| 01.04.2020 இல் உள்ளவாறான மூலதனக் கணக்கு மீதிகள் (நன்மதிப்புச் சீராக்கத்தின் பின்) | 5 000 | 3 200 | 1 800 |
| **31.03.2021 இல் முடிவடையும் வருடத்துக்கானது:** | | | |
| - இலாபப் பங்கு | 1 000 | 600 | 400 |
| - பங்காளர் சம்பளங்கள் | 800 | 800 | 600 |

**38.** மதன், சுதன், ஏரன் பங்குடமைக்கான பின்வருவனவற்றை அடையாளம் காண்க.

(அ) 01.04.2020 இல் ஏரனால் கொண்டுவரப்பட்ட காசு : ரூ.' 000 ........................

(ஆ) 31.03.2021 இல் முடிவடையும் வருடத்திற்கான பங்குடமையின் இலாபம் : ரூ.' 000 ........................

[பக். 10 ஐப் பார்க்க

**39.** மதனுக்குப் பகிரப்பட்ட மொத்த இலாபத்தையும் சுதனுக்குப் பகிரப்பட்ட சம்பளத்தையும் பதிவு செய்வதற்கான நாட்குறிப்புப் பதிவுகளை எழுதுக.

| விபரம் | வரவு (ரூ.'000) | செலவு (ரூ.'000) |
|---|---|---|
| (அ) ............................................................................ <br> ............................................................................ <br> (மதனுக்குப் பகிரப்பட்ட மொத்த இலாபம்) | .................. | .................. |
| (ஆ) ............................................................................ <br> ............................................................................ <br> (சுதனுக்குப் பகிரப்பட்ட சம்பளம்) | .................. | .................. |

**40.** LKAS 7 (காசுப்பாய்ச்சல் கூற்று) இன்படி ஆடை உற்பத்திக் கம்பனி ஒன்றின் பின்வரும் காசுப்பாய்ச்சல் ஒவ்வொன்றையும் வகைப்படுத்துக.

| காசுப்பாய்ச்சல் | வகைப்படுத்தல் |
|---|---|
| A - உரிமைப்பங்குகள் வழங்கலிலிருந்து பெறப்பட்ட காசு | .............................. |
| B - ஏனைய கம்பனிகளின் பங்குகளின் முதலீடுகளிலிருந்து பெறப்பட்ட பங்குலாபங்கள் | .............................. |
| C - வியாபாரக் கடன்கொடுத்தோர் ஒருவருக்குக் கொடுக்க வேண்டிய தொகையைக் கொடுத்துத் தீர்த்தல் | .............................. |
| D - குத்தகையொன்றிற்கான ஆரம்பக் கொடுப்பனவினைச் செலுத்துதல் | .............................. |

**41.** அனோஜா PLC ஆனது மின்சாரப் பொருட்களை உற்பத்தி செய்து விற்பனை செய்கிறது. இக்கம்பனியால் வாடிக்கையாளர் ஒருவருக்குக் குறைபாடுள்ள பொருட்கள் விற்கப்பட்டமை தொடர்பில் 31.03.2021 இல் உள்ளவாறு நீதிமன்ற வழக்கொன்று நடைமுறையிலுள்ளது. சட்ட ஆலோசனையின் படி, 31.03.2021 இல் கம்பனி இது தொடர்பில் ரூ. 50 000 இற்கு ஏற்பாடு ஒன்றைச் செய்துள்ளது. 25.04.2021இல், வாடிக்கையாளருக்கு நட்ட ஈடாக ரூ. 75 000 ஐச் செலுத்துமாறு நீதிமன்றம் கம்பனிக்கு கட்டளை பிறப்பித்திருந்தது. 31.03.2021 இல் முடிவடைந்த வருடத்துக்கான நிதிக்கூற்றுக்களை வழங்குவதற்குக் கம்பனியின் இயக்குநர்கள் 15.05.2021 இல் அதிகாரமளித்துள்ளனர்.

(அ) LKAS 10 (அறிக்கையிடும் காலத்துக்குப் பின்னரான நிகழ்வுகள்) இன்படி, இந்நீதிமன்றக் கட்டளையானது சீராக்கும் நிகழ்விற்கா அல்லது சீராக்கத் தேவையற்ற நிகழ்விற்கா இட்டுச் செல்லும் என்பதைக் குறிப்பிடுக.

.......................................................................................................................

(ஆ) LKAS 37 (ஏற்பாடுகள், நிகழத்தக்க பொறுப்புக்கள் மற்றும் நிகழத்தக்க சொத்துக்கள்) இன்படி நீதிமன்றக் கட்டளை தொடர்பில் 31.03.2021 இல் இனங்காணப்பட்ட பொறுப்பு : ரூ. ..........................................

More Past Papers at
tamilguru.lk

[பக். 11 ஐப் பார்க்க

**42.** 31.03.2021 மற்றும் 01.04.2020 இல் உள்ளவாறு சந்திரிகா PLC யில் பின்வரும் மீதிகள் கிடைக்கக்கூடியதாக இருந்தன.

| | 31.03.2021 இல் (ரூ.'000) | 01.04.2020 இல் (ரூ.'000) |
|---|---|---|
| கூறப்பட்ட மூலதனம் - சாதாரண பங்குகள் | 7 500 | 5 000 |
| நிறுத்திவைத்தி வருவாய்கள் | 4 000 | 2 500 |

இக்கம்பனியின் 31.03.2021 இல் முடிவடைந்த வருடத்திற்கான இலாபம் ரூ. 3 500 000 ஆக இருந்தது. இவ்வருடத்தில் கம்பனி இடைக்காலப் பங்குலாபமாக ரூ. 500 000 ஐச் செலுத்தியது. மேலும், கம்பனி நிறுத்திவைத்த வருவாயில் ஒரு பகுதியை மூலதனமாக்கியதுடன் 31.03.2021 இல் முடிவடைந்த வருடத்தில் பொதுப் பங்குவழங்கல் ஒன்றையும் மேற்கொண்டுள்ளது. வணிகத்தின் உரிமையாண்மை மீது தாக்கத்தைச் செலுத்தக்கூடிய வேறெந்தக் கொடுக்கல் வாங்கல்களும் இடம்பெறவில்லை.

31.03.2021 இல் முடிவடைந்த வருடத்திற்குப் பின்வருவனவற்றை அடையாளங்காண்க:

(அ) மூலதனமாக்கப்பட்ட ஒதுக்கங்களின் பெறுமதி :ரூ.' 000 ....................

(ஆ) பொதுப்பங்கு வழங்கலின் பெறுமதி :ரூ.' 000 ....................

**43.** 2018 இல் அறிமுகப்படுத்தப்பட்ட நிதி அறிக்கையிடலுக்கான எண்ணக்கருச் சட்டகத்துக்கு இணங்கப் பின்வரும் வாக்கியங்களைப் பூரணப்படுத்துக.

A பொருத்தமான தன்மை மற்றும் ......................... ஆகியன நிதித் தகவல்களின் அடிப்படைத் தர ரீதியான இரு பண்புகளாகும்.

B கடந்தகால நிகழ்வொன்றின் விளைவாக ஏற்பட்ட பொருளாதார வளங்களை மாற்றுவதற்கான .................................. பொறுப்பு ஒன்றாக வரையறுக்கப்படுகின்றது.

C அளவீட்டு அடிப்படைகள், பரந்தளவில் வரலாற்றுக் கிரயம் மற்றும் ............................... என வகைப்படுத்தப்படுகின்றன.

D பொருளாதார நன்மைகளை உருவாக்குவதற்கான உள்ளார்ந்த ஆற்றல் கொண்ட உரிமை ............................ என வரையறுக்கப்படுகின்றது.

**44.** சுரங்கா PLC ஆனது இயந்திரங்களை உள்ளூர் சந்தையில் விற்பனை செய்கின்றது. இயந்திரங்களை நிறுவுவதற்கு விசேட அறிவு தேவைப்படுவதனால் கம்பனியானது இயந்திர நிறுவுதலையும் மேற்கொள்கின்றது. இயந்திரம் ஒன்றின் விற்பனை விலை, நிறுவுதல் கட்டணம் என்பன முறையே ரூ. 3 000 000, ரூ. 400 000 ஆகும். கம்பனியானது 01.03.2021 இல் 05 இயந்திரங்களை விற்பனை செய்து அவற்றை நிறுவுதற்கான ஒப்பந்தமொன்றைச் செய்துள்ளது. 31.03.2021 இல் கம்பனி இவ்வியந்திரங்களில் 03 இயந்திரங்களை விநியோகித்துள்ளதுடன் அவற்றுள் 02 இயந்திரங்களின் நிறுவுதலைப் பூர்த்தி செய்துள்ளது. இவ்வொப்பந்தத்திற்குக் கம்பனி 01.03.2021 இல் ரூ. 11 000 000 முற்பணமாகப் பெற்றுக் கொண்டது.

SLFRS 15 (வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களிலிருந்தான வருவாய்) இன்படி இந்த ஒப்பந்தத்துக்கான பின்வருவனவற்றை அடையாளங்காண்க:

(அ) 31.03.2021 இல் முடிவடைந்த வருடத்தில் இனங்காணப்பட்ட வருவாய் : ரூ. ..................................

(ஆ) 31.03.2021 இல் உள்ளவாறு உழைக்கப்படாத வருவாய் : ரூ. ..................................

**45.** பின்வரும் தகவல்கள் 31.03.2021 இல் முடிவடைந்த வருடத்திற்கான கவிதா PLC இன் நிதிக்கூற்றுக்களிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டவையாகும்.

| | ரூ.' 000 |
|---|---|
| விற்பனைக்கிரயம் | 420 |
| ஆரம்ப இருப்பு | 80 |
| இறுதியிருப்பு | 60 |

வருடத்திற்கான வேலை நாட்களின் எண்ணிக்கை 360 எனக் கருதுக.

பின்வருவனவற்றை அடையாளங்காண்க:

(அ) இருப்புப் புரள்வு விகிதம் : ...................................... தடவைகள்

(ஆ) இருப்பு வைப்புக் காலம் : ...................................... நாட்கள்

[பக். 12 ஐப் பார்க்க

**46.** உற்பத்தி வணிகமொன்றின் 2021 யூலை மாதத்துக்கான தகவல்கள் பின்வருமாறு.

| | **ரூ.' 000** |
|---|---|
| மொத்த மூலக்கிரயம் | 4 500 |
| மொத்த உற்பத்தி மேந்தலைகள் | 3 000 |
| மொத்த உற்பத்தியல்லா மேந்தலைகள் | 2 000 |

இவ்வணிகமானது 2021 யூலை மாதத்தில் 10,000 அலகுகளை உற்பத்தி செய்தது. அலகொன்றிற்கான மாறும் கிரயம் ரூ. 600 ஆகும்.

பின்வருவனவற்றை அடையாளங்காண்க:

(அ) மொத்த உற்பத்திக் கிரயம் : ரூ.'000 ……………………………

(ஆ) மொத்தக் கிரயம் : ரூ.'000 ……………………………

(இ) மொத்த நிலையான கிரயம் : ரூ.'000 ……………………………

**47.** கிரய வகைப்படுத்தலுக்கு இணங்கப் பின்வரும் கூற்றுக்களைப் பூரணப்படுத்துக.

(அ) கிரயங்களானவை இருப்பு மதிப்பீட்டிற்காக …………………………… மற்றும் …………………………… என வகைப்படுத்தப்படுகின்றன.

(ஆ) கிரயங்கள் அவற்றின் நடத்தையின் அடிப்படையில் …………………………… மற்றும் …………………………… என வகைப்படுத்தப்படுகின்றன.

**48.** உற்பத்தி நிறுவனமொன்றில் பயன்படுத்தப்படும் மூலப்பொருளொன்றுக்கான பின்வரும் தகவல்கள் தரப்பட்டுள்ளன.

- வருடாந்தக் கேள்வி - 3 200 அலகுகள்
- மூலப்பொருட் கிரயம் - அலகொன்றுக்கு ரூ. 800
- கட்டளைக் கிரயம் - கட்டளையொன்றுக்கு ரூ. 1 000
- வருடாந்த இருப்பு வைத்தற் கிரயம் - மூலப்பொருட் கிரயத்தில் 20%

பின்வருவனவற்றை அடையாளங்காண்க.:

(அ) சிக்கனக் கட்டளைத் தொகை (EOQ) : …………… அலகுகள்

(ஆ) EOQ இல் கட்டளையிடப்பட்டிருப்பின் வருடாந்த மொத்தக் கட்டளைக்கிரயம் : ரூ. ……………………

**49.** கம்பனியொன்று தனிப்பொருள் ஒன்றை உற்பத்தி செய்கின்றது. அதன் அலகொன்றிற்கான பங்களிப்பு ரூ. 50 ஆகும். பின்வரும் தகவல்கள் இக்கம்பனியின் இரண்டு செயற்பாட்டு மட்டங்களுடன் தொடர்புடையவையாகும்.

| **உற்பத்தி செய்யப்பட்ட அலகுகள்** | **அலகொன்றிற்கான மொத்தக் கிரயம் (ரூ.)** |
|---|---|
| 4 000 | 100 |
| 6 000 | 80 |

பின்வருவனவற்றைக் குறிப்பிடுக.:

(அ) மொத்த நிலையான கிரயம் : ரூ. ……………………………

(ஆ) அலகொன்றுக்கான விற்பனை விலை : ரூ. ……………………………

**50.** தோட்டக் கம்பனியொன்று சேதனப் பசளை உற்பத்தி செய்யும் செயற்றிட்டமொன்றிற்கு புதிய இயந்திரம் ஒன்றைக் கொள்வனவு செய்ய விரும்புகின்றது. இவ்வியந்திரத்தின் கொள்வனவு விலையானது ரூ. 5 500 000 ஆக மதிப்பிடப்படுகின்றது. அதன் எதிர்பார்க்கப்பட்ட பயன்தரு ஆயுட்காலமும் எஞ்சிய பெறுமதியும் முறையே 8 வருடங்கள், ரூ. 700 000 ஆகும். இக்கம்பனி இச்செயற்றிட்ட அறிக்கையைத் தயார்செய்வதற்கு ரூ. 60 000 ஐச் செலுத்தியது. மேலும், இச்செயற்றிட்டத்தின் ஆரம்பத்தில் ரூ. 150 000 தொழிற்படு மூலதனமாகத் தேவைப்படுவதுடன் இது செயற்றிட்டத்தின் இறுதிக்காலத்தில் மீளப்பெறப்படக்கூடியதாகும். இச்செயற்றிட்டத்தின் காரணமாக மதிப்பிடப்பட்ட வருடாந்தக் காசு வெளிப்பாய்ச்சல் சேமிப்புக்கள் ரூ. 800 000 ஆகும்.

இச்செயற்றிட்டத்துக்கான பின்வருவனவற்றை அடையாளங்காண்க :

(அ) மொத்த ஆரம்பக் காசு வெளிப்பாய்ச்சல் : ரூ. ……………………………

(ஆ) 8 ஆவது வருடத்தின் மொத்தக் காசு உட்பாய்ச்சல் : ரூ. ……………………………

(இ) 1 ஆவது வருடத்தின் வருடாந்தச் செயற்பாட்டு இலாபம் : ரூ. ……………………………

(ஈ) ஆழ்ந்த கிரயம் : ரூ. ……………………………

* * *

013275

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2021(2022)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2021(2022)
General Certificate of Education (Adv. Level) Examination, 2021(2022)

ගිණුම්කරණය II
கணக்கீடு II
Accounting II

33 T II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

செய்நிரலாக்கத்தகா (Non - Programmable) கணிப்பான்கள் பயன்படுத்துவதற்கு அனுமதிக்கப்படும்.

**அறிவுறுத்தல்கள் :**

* **முதலாம், இரண்டாம்** வினாக்கள் உட்பட **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
* ஒவ்வொரு வினாவுக்கும் **புதிய தாளில்** விடை எழுத ஆரம்பித்தல் வேண்டும்.
* உரிய செய்முறைகள் விடைத்தாளுடன் இணைக்கப்படல் வேண்டும்.
* இவ்வினாத்தாளுக்கு **200** புள்ளிகள் உரித்தாகும்.

**1.** எழிலன் PLC இன் 31.03.2021 இலுள்ளவாறான சுருக்கிய பரீட்சை மீதியானது கீழே தரப்பட்டுள்ளது.

| **விபரம்** | **வரவு (ரூ.'000)** | **செலவு (ரூ.'000)** |
|---|---|---|
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் : | | |
| காணி - கிரயத்தில் | 10 000 | |
| கட்டடங்கள் - கிரயத்தில் | 18 000 | |
| அலுவலக உபகரணங்கள் - கிரயத்தில் | 7 500 | |
| மோட்டார் வாகனங்கள் - மீதி | 20 000 | |
| 31.03.2021 இல் திரண்ட பெறுமானத் தேய்வு: | | |
| கட்டடங்கள் | | 3 000 |
| அலுவலக உபகரணங்கள் | | 1 500 |
| மோட்டார் வாகனங்கள் | | 6 500 |
| இருப்புக்கள் | 4 250 | |
| வியாபார வருமதிகள் | 7 400 | |
| வியாபாரக் கொடுக்குமதிகள் | | 4 250 |
| சொத்துப் பாவனை உரிமை | 2 500 | |
| காசும் காசுக்குச் சமமானவையும் | 500 | |
| கூறப்பட்ட மூலதனம் - சாதாரண பங்குகள் | | 38 000 |
| 01.04.2020 இல் நிறுத்திவைத்த வருவாய்கள் | | 12 500 |
| விற்பனைகள் | | 60 000 |
| விற்பனைக் கிரயம் | 38 500 | |
| நிர்வாகச் செலவுகள் | 6 800 | |
| விநியோகக்கிரயம் | 7 200 | |
| நிதிக்கிரயம் | 1 200 | |
| ஏனைய செலவுகள் | 600 | |
| செலுத்திய வருமானவரி | 1 900 | |
| 01.04.2020 இல் வருமான வரிக்கான ஏற்பாடு | | 600 |
| | **126 350** | **126 350** |

[பக். 2 ஐப் பார்க்க

0303000032013275

**மேலதிக தகவல்கள்:**

31.03.2021 இல் முடிவடைந்த வருடத்துக்கான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முன்னர் பின்வருவனவற்றுக்கான சீராக்கங்கள் செய்யப்படல் வேண்டும்.

(i) ரூ. 1 200 000 கிரயமான அலுவலக உபகரணமொன்று 30.06.2020 இல் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதுடன் அது முறையாகக் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது மட்டுமே இவ்வருடத்தில் பொறி, ஆதனம் மற்றும் உபகரணங்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட ஒரேயொரு கொள்வனவாகும்.

(ii) காணியும் அலுவலக உபகரணங்களும் முதல் தடவையாக 31.03.2021 இல் அவற்றின் சந்தை விலைகளில் பின்வருமாறு மீள்மதிப்பீடு செய்யப்பட்டன.

| | ரூ.'000 |
|---|---|
| காணி | 15 000 |
| அலுவலக உபகரணங்கள் | 5 000 |

எனினும், இம் மீள்மதிப்பீடுகளுக்கான கணக்கீட்டுப் பதிவுகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

(iii) கட்டடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களுக்கான நடைமுறை வருடத்திற்கான பெறுமானத்தேய்வு சரியாகக் கணிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(iv) மோட்டார் வாகனமொன்று 01.10.2020 இல் ரூ. 4 000 000 இற்கு விற்பனை செய்யப்பட்டது. இம்மோட்டார் வாகனம் 01.10.2018 இல் ரூ. 5 000 000 இற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. கம்பனி மோட்டார் வாகனங்களுக்கு நேர்கோட்டு முறையில் கிரயத்தில் 20% பெறுமானத்தேய்வு செய்கின்றது. மோட்டார் வாகன விற்பனையால் பெறப்பட்ட காசு காசுக்கணக்கில் 'வரவிலும்' மோட்டார் வாகனக் கணக்கில் 'செலவிலும்' பதியப்பட்டுள்ளது. இது தொடர்பில் வேறு எந்தக் கணக்கீட்டுப் பதிவுகளும் செய்யப்படவில்லை. நடைமுறை வருடத்திற்கான மோட்டார் வாகனங்களுக்கான பெறுமானத்தேய்வானது, வருட ஆரம்பத்திலுள்ள மோட்டார் வாகனக் கணக்கு மீதியின் அடிப்படையில் முழு வருடத்திற்கும் கணிக்கப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(v) நிர்வாகச் செலவுகளினதும் விநியோகக் கிரயத்தினதும் உள்ளடக்கங்கள் பின்வருமாறு:

| **விபரம்** | **நிர்வாகச் செலவுகள் (ரூ.'000)** | **விநியோகக் கிரயம் (ரூ.'000)** |
|---|---|---|
| சம்பளங்களும் தொடர்புடைய செலவுகளும் | 2 500 | 1 200 |
| இயக்குநர்கள் கட்டணம் | 1 200 | — |
| கட்டடங்களின் பெறுமானத்தேய்வு | 900 | — |
| மோட்டார் வாகனங்களின் பெறுமானத்தேய்வு | — | 4 800 |
| அலுவலக உபகரணங்களின் பெறுமானத்தேய்வு | 750 | — |
| விளம்பரம் | — | 800 |
| ஏனைய அலுவலகச் செலவுகள் | 1 450 | — |
| ஏனைய விநியோகக் கிரயம் | — | 400 |
| **மொத்தம்** | **6 800** | **7 200** |

(vi) சாதாரண பங்குதாரர்களுக்குச் செலுத்திய இடைக்காலப் பங்குலாபமானது ஏனைய விநியோகக் கிரயமாகக் காட்டப்பட்டுள்ளது.

(vii) 31.03.2021 இல் செலுத்த வேண்டிய கணக்காய்வுக்கட்டணம் ரூ. 300 000 இற்கு எதுவித பதிவும் மேற்கொள்ளப்படவில்லை.

(viii) கம்பனியானது 31.03.2021 இல் பொறியொன்றை 5 வருடங்களுக்குப் பயன்படுத்துவதற்கான உரிமையைப் பெற்றுக்கொள்வதற்காக குத்தகை உடன்படிக்கையொன்றைச் செய்துள்ளது. குத்தகை உடன்படிக்கையின் படி, 31.03.2021 இல் ஆரம்பக் கொடுப்பனவாக ரூ. 2 500 000 செலுத்தப்பட்டது. குத்தகைக் காலத்தில் ஒவ்வொன்றும் ரூ. 971 000 ஆன ஐந்து வருடாந்தக் குத்தகைத் தவணைக் கட்டணங்கள் செலுத்தப்பட வேண்டும். முதலாவது தவணைக் கட்டணமானது 31.03.2022 இல் நிலுவையாகவுள்ளது. குத்தகைக் காலம் முழுவதும் செலுத்த வேண்டிய மொத்த வட்டி ரூ. 1 355 000 ஆகும். இது 31.03.2022 இல் முடிவடையும் வருடத்திற்கான வட்டி ரூ. 420 000 ஐயும் உள்ளடக்கியுள்ளது. ஆரம்பக் கொடுப்பனவு மட்டுமே சொத்துப்பாவனை உரிமையாக இனங்காணப்பட்டுள்ளது. இது தொடர்பில் வேறு எதுவித பதிவுகளும் மேற்கொள்ளப்படவில்லை.

(ix) செலுத்திய வருமான வரியானது கடந்த வருடத்துக்காகச் செலுத்திய ரூ. 500 000 ஐயும், நடைமுறை வருடத்தின் முதல் மூன்று காலாண்டுகளுக்குச் செலுத்திய வரியையும் உள்ளடக்கியுள்ளது. நடைமுறை வருடத்தின் இறுதிக் காலாண்டுக்குச் செலுத்த வேண்டிய வருமான வரி ரூ. 200 000 ஆக மதிப்பிடப்பட்டுள்ளது.

(x) நிதிக்கூற்றுக்களை வழங்குவதற்கு இயக்குநர்களால் 31.05.2021 இல் அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. இத்திகதிக்கு முன்னர் பின்வரும் நிகழ்வுகள் இடம்பெற்றிருந்தன.

- கம்பனியின் வியாபாரக் கடன்பட்டோர் ஒருவர் கடன் தீர்க்க வகையற்றவராக 01.05.2021 இல் நீதிமன்றத்தால் வெளிப்படுத்தப்பட்டுள்ளார். 31.03.2021 இல் பரீட்சைமீதியில் காட்டப்பட்டுள்ள வியாபார வருமதிகள் மீதியானது இக்கடன்பட்டோரிடமிருந்து பெறவேண்டிய ரூ. 600 000 ஐயும் உள்ளடக்கியுள்ளது.
- ரூ. 5 000 000 கொண்டுசெல்லும் மீதியுடைய கட்டடம் ஒன்று 15.05.2021 இல் ஏற்பட்ட தீ காரணமாக முற்றாக அழிவடைந்துள்ளது.



[பக். 3 ஐப் பார்க்க

**வேண்டப்படுவது:**

LKAS 1 (நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்) இன்படி பிரசுரிப்பதற்குத் தேவையான எழிலன் PLC இன் பின்வரும் நிதிக்கூற்றுக்கள் (குறிப்புக்கள் உட்பட):

(1) 31.03.2021 இல் முடிவடைந்த வருடத்துக்கான இலாபம் அல்லது நட்டம் மற்றும் ஏனைய முற்றுமடங்கிய வருமானக் கூற்று
(2) 31.03.2021 இல் முடிவடைந்த வருடத்துக்கான உரிமையாண்மை மாற்றங்களுக்கான கூற்று
(3) 31.03.2021 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று

**(மொத்தம் 40 புள்ளிகள்)**

013275

**2.** (அ) மிதுலன் கல்வி நிறுவனமானது தொழில்சார் கணக்கீட்டுக் கற்கைநெறிகளுக்கான விரிவுரைகளை நிகழ்த்துவதற்கென 01.05.2021 இல் ஆரம்பிக்கப்பட்டது. இந்நிறுவனத்தில் மூன்று விரிவுரையாளர்கள் பணியாற்றுகின்றனர். ஒவ்வொரு விரிவுரையாளரும் மாதமொன்றுக்கு ஆகக்குறைந்தது 40 மணித்தியாலங்கள் விரிவுரை நிகழ்த்தவேண்டியிருப்பதுடன், மேலதிக விரிவுரை மணித்தியாலங்களுக்கு மேலதிகக் கொடுப்பனவு வழங்கப்படுகின்றது.

விரிவுரையாளர் ஒருவருக்கான ஊதியம் பின்வருமாறு :

| | ரூ. |
|---|---|
| மாதாந்த நிலையான கொடுப்பனவு (ஆகக்குறைந்த விரிவுரை நேரத்துக்கானது) | 100 000 |
| மேலதிக விரிவுரை நேரத்துக்கான கட்டணம் (மணித்தியாலமொன்றிற்கு) | 3 000 |

பின்வரும் மேலதிக தகவல்களும் தரப்பட்டுள்ளன.

(i) கோவிட் (COVID) தொற்றுநிலை காரணமாக விரிவுரைகள் இணைய வழியூடாக மேற்கொள்ளப்பட்டன. ஒவ்வொரு விரிவுரையாளருக்கும் தற்காலிக இணையத்தளப் படியாக (Internet allownace) மாதமொன்றுக்கு ரூ. 5 000 செலுத்தப்பட்டுள்ளது.

(ii) 2021 வைகாசி மாதத்துக்கான விரிவுரை மணித்தியாலங்கள் மற்றும் சம்பளத்திலிருந்தான கழிப்பனவுகள் பற்றிய விபரங்கள் பின்வருமாறு:

| ஊழியர் இல. | விரிவுரை மணித்தியாலங்கள் | ஊழியர் கடன் தவணைப்பணம் (ரூ.) | சம்பள முற்பணம் (ரூ.) |
|---|---|---|---|
| 001 | 50 | 40 000 | – |
| 002 | 70 | – | 25 000 |
| 003 | 40 | 60 000 | – |

(iii) ஊழியர் இல. 003 ஐக் கொண்ட விரிவுரையாளர் இந்த நிறுவனத்தின் முகாமையளராகவும் பணியாற்றுகின்றார். இது தொடர்பில் அவருக்கு மேலதிக மாதாந்த நிலையான கொடுப்பனவாக ரூ. 50 000 செலுத்தப்படுகின்றது.

(iv) ஊழியர் சேமலாப நிதியத்துக்கான (EPF) தொழில்தருநர் மற்றும் தொழிலாளர் பங்களிப்புகள் முறையே 15%, 10% ஆகும். ஊழியர் நம்பிக்கை நிதியத்துக்கான (ETF) தொழில்தருநர் பங்களிப்பு 3% ஆகும். இணைய வழியில் வேலை செய்வதற்காகச் செலுத்தப்பட்ட தற்காலிக இணையத்தளப் படி தவிர்ந்த எல்லாக் கொடுப்பனவுகளும் EPF மற்றும் ETF கணிப்பீட்டுக்காகக் கருத்திற் கொள்ளப்படுகின்றன.

**வேண்டப்படுவது:**

(1) 2021 வைகாசி மாதத்துக்கான சம்பளப்பட்டியல்
(2) 2021 வைகாசி மாதத்துக்கான சம்பளக் கட்டுப்பாட்டுக்கணக்கு **(16 புள்ளிகள்)**

(ஆ) சமந்தி PLC ஆனது 'மாம்பழம்', 'தோடம்பழம்' என்னும் இரு வகையான பழரசங்களை உற்பத்தி செய்கின்றது. இது 'செய்முறை', மற்றும் 'போத்தலில் அடைத்தல்' ஆகிய இரண்டு உற்பத்தித் திணைக்களங்களையும் 'களஞ்சியம்' எனும் சேவைத் திணைக்களத்தையும் கொண்ட தொழிற்சாலை ஒன்றைக் கொண்டுள்ளது. இத்திணைக்களங்கள் யாவும் ஒரே இடத்திலேயே அமைந்துள்ளன. அதிகூடிய செயற்பாட்டு மட்டத்தில் அடுத்த வருடத்துக்கான பாதிடப்பட்ட மேந்தலைகள் பின்வருமாறு தரப்பட்டுள்ளன.

| விபரம் | மொத்தம் (ரூ.) | செய்முறைத் திணைக்களம் (ரூ.) | போத்தலில் அடைத்தல் திணைக்களம் (ரூ.) | களஞ்சியம் (ரூ.) |
|---|---|---|---|---|
| உற்பத்தி முகாமையாளர்களின் சம்பளங்கள் | 710 000 | 384 000 | 326 000 | – |
| களஞ்சியக் காப்பாளர் சம்பளம் | 300 000 | – | – | 300 000 |
| நேரில் கூலிகள் | 1 200 000 | ? | ? | ? |
| மின்சாரக் கட்டணங்கள் | 240 000 | ? | ? | ? |
| வாடகை | 480 000 | ? | ? | ? |
| இயந்திரப் பெறுமானத்தேய்வு (நேர்கோட்டுமுறை அடிப்படையில்) | 120 000 | ? | ? | – |

0203000032011327 5

[பக். 4 ஐப் பார்க்க

**மேலதிக தகவல்கள்:**

(i) மேந்தலைப் பகிர்வு அடிப்படைகளும் ஏனைய தொடர்புடைய தகவல்களும் பின்வருமாறு:

| விபரம் | செய்முறைத் திணைக்களம் | போத்தலில் அடைத்தல் திணைக்களம் | களஞ்சியம் |
|---|---|---|---|
| தளப்பரப்பு (சதுர மீற்றர்) | 30 000 | 10 000 | 8 000 |
| கிலோவாற் மணித்தியாலங்கள் | 4 000 | 3 000 | 1 000 |
| ஊழியர்களின் எண்ணிக்கை | 60 | 50 | 10 |
| இயந்திரம் - கிரயம் (ரூ.) | 1 500 000 | 500 000 | – |
| பாதிடப்பட்ட இயந்திர மணித்தியாலங்கள் (வருடாந்தம்) | 60 000 | 30 000 | – |
| பாதிடப்பட்ட நேர் ஊழிய மணித்தியாலங்கள் (வருடாந்தம்) | 20 000 | 50 000 | – |

(ii) களஞ்சியத்தின் மொத்த மேந்தலைகள், செய்முறை மற்றும் போத்தலில் அடைத்தல் திணைக்களங்களுக்கு இடையில் முறையே 3 : 2 என்ற விகிதத்தில் மீள்பகிர்வு செய்யப்படுகின்றது.

(iii) செய்முறைத் திணைக்களமானது மேந்தலைகளை இயந்திர மணித்தியாலங்களின் அடிப்படையில் உறுஞ்சுவதுடன் போத்தலில் அடைத்தல் திணைக்களமானது மேந்தலைகளை நேர் ஊழிய மணித்தியாலங்களின் அடிப்படையில் உறிஞ்சுகிறது.

(iv) பின்வரும் தகவல்கள் கம்பனியால் உற்பத்தி செய்யப்படும் இரண்டு உற்பத்திப் பொருட்களுடன் தொடர்புடையனவாகும்.

| | போத்தலொன்றிற்கு: மாம்பழ ரசம் | தோடம்பழ ரசம் |
|---|---|---|
| உண்மையான இயந்திர மணித்தியாலங்கள்: | | |
| செய்முறைத் திணைக்களம் (மணித்தியாலங்கள்) ........................ | 2 | 3 |
| போத்தலில் அடைத்தல் திணைக்களம் (மணித்தியாலங்கள்) ..... | 2 | 4 |
| உண்மையான நேர் ஊழிய மணித்தியாலங்கள்: | | |
| செய்முறைத் திணைக்களம் (மணித்தியாலங்கள்) ..................... | 2 | 3 |
| போத்தலில் அடைத்தல் திணைக்களம் (மணித்தியாலங்கள்) ..... | 3 | 5 |
| நேர் ஊழியக் கிரயம் (ரூ.) ........................................................ | 50 | 60 |
| நேர் மூலப்பொருள் கிரயம் (ரூ.) ................................................ | 115 | 70 |

**வேண்டப்படுவது:**

(1) பகிர்வு அடிப்படையைத் தெளிவாகக் காட்டக்கூடியதான மேந்தலைப் பகுப்பாய்வு அட்டவணை

(2) செய்முறை மற்றும் போத்தலில் அடைத்தல் திணைக்களங்களின் மேந்தலை உறிஞ்சல் வீதங்கள்

(3) 'மாம்பழ ரசம்' போத்தலொன்றினதும் 'தோடம்பழ ரசம்' போத்தலொன்றினதும் மொத்தக் கிரயம் (தனித்தனியாக)

(4) விற்பனை விலையில் 20% இலாபம் பேணப்படுமாயின், மாம்பழ ரசப் போத்தலொன்றின் விற்பனை விலை

**(24 புள்ளிகள்)**

**(மொத்தம் 40 புள்ளிகள்)**

**3.** கல்யாணி என்ரபிறைசஸ் 01.04.2021 இல் காகிதாதிகளை விற்பனை செய்வதற்குத் தனியுடமை வணிகமொன்றை ஆரம்பித்தது. பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் இவ்வணிகத்தில் 2021 ஏப்ரல் மாதத்தில் இடம்பெற்றுள்ளன.

1. வணிகத்தின் உரிமையாளரான கல்யாணி ரூ. 500 000 ஐக் காசாக முதலிட்டு அத்தொகையை வங்கியில் வைப்புச் செய்து நடைமுறைக் கணக்கொன்றை ஆரம்பித்தார். அவர் ரூ. 750 000 பெறுமதியான நிழற்பிரதியெடுக்கும் இயந்திரமொன்றையும் ஆரம்ப மூலதனத்தின் ஒரு பகுதியாக வழங்கியுள்ளார். (நிறுவனத்தின் அனைத்து காசுக் கொடுக்கல் வாங்கல்களும் வங்கிக் கணக்கினூடாக மேற்கொள்ளப்படுகின்றன.)
2. ரூ. 200 000 கிரயமான காகிதாகிகள் கடனுக்குக் கொள்வனவு செய்யப்பட்டன.
3. ரூ. 40 000 கிரயமான காகிதாகிகள் தரக்குறைவு காரணமாக விநியோகத்தருக்குத் திருப்பியனுப்பப்பட்டன.
4. ரூ. 60 000 கிரயமான காகிதாகிகள் ரூ. 100 000 இற்குக் கடனுக்கு விற்பனை செய்யப்பட்டன.
5. வாடிக்கையாளர் ஒருவர் ரூ. 10 000 இற்கு விற்கப்பட்ட காகிதாதிகளைத் திருப்பியனுப்பியுள்ளார். இக்காகிதாகிகளின் கிரயம் ரூ. 6 000 ஆகும்.
6. காகிதாதி விநியோகத்தருக்குச் செலுத்தவேண்டிய தொகை ரூ. 160 000 ஆனது 5% கழிவுடன் கொடுத்துத் தீர்க்கப்பட்டது.
7. முன்பள்ளி ஒன்றுக்கு ரூ. 3 000 கிரயமான காகிதாதிகள் அன்பளிப்புச் செய்யப்பட்டன.
8. வாடிக்கையாளர் ஒருவரிடமிருந்து ரூ. 1 000 கழிவு அனுமதிக்கப்பட்ட பின்னர் ரூ. 9 000 காசோலையொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.
9. ஏப்ரல் மாதத்துக்குச் செலுத்த வேண்டிய மின்சாரம் ரூ. 7 000 ஆகும்.
10. நிழற்பிரதியெடுக்கும் இயந்திரத்தின் மாதாந்த பராமரிப்புச் செலவு ரூ. 5 000 செலுத்தப்பட்டுள்ளது.
11. இம்மாதத்தில் 5 000 நிழற்பிரதிகள் பெறப்பட்டு அவை காசுக்கு விற்கப்பட்டன. பிரதியொன்றுக்கான விற்பனை விலையும் காகிதாதிச் செலவும் முறையே ரூ. 7, ரூ. 4 ஆகும்.
12. நிழற்பிரதி இயந்திரத்தின் ஏப்ரல் மாதத்திற்கான பெறுமானத்தேய்வு ரூ. 15 000 ஆகும்.

[பக். 5 ஐப் பார்க்க

பின்வரும் மேலதிக தகவல்கள் 05.05.2021 இல் கிடைக்கப்பெற்ற வங்கிக்கூற்றிலிருந்து பெறப்பட்டன. வணிகத்தின் 30.04.2021 இல் உள்ளவாறான காசு மீதியைக் கணிப்பிடுகையில் பின்வரும் தகவல்கள் கருத்திற்கொள்ளப்படவில்லை.

(i) நிழற்பிரதி இயந்திரத்தின் பராமரிப்புச் செலவுக்காகக் கொடுக்கப்பட்ட காசோலை ரூ. 5 000 வங்கிக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(ii) ஏப்ரல் மாதத்துக்கான வங்கிக் கட்டணங்கள் ரூ. 1 000 ஆகும்.

(iii) நிலையான கட்டளையின்படி உரிமையாளரது மகளின் மாதாந்தப் பாடசாலைக் கட்டணம் ரூ. 5 000 செலுத்தப்பட்டுள்ளது.

(iv) வாடிக்கையாளர் ஒருவரால் நேரடியாக வங்கியில் ரூ. 20 000 வைப்புச் செய்யப்பட்டுள்ளது.

013275

**வேண்டப்படுவது:**

(1) கணக்கீட்டுச் சமன்பாட்டைப் பயன்படுத்தி இலக்கம் 1 தொடக்கம் 12 வரையான கொடுக்கல் வாங்கல்களின் தாக்கத்தை (பெறுமதியுடன்) காட்டுக. ஒவ்வொரு பெறுமதியும் அதிகரிக்குமாயின் (+) எனவும் குறைவடையுமாயின் (–) எனவும் குறிப்பிடுக. (இவ்வினாவுக்கு விடையளிக்கும்போது கீழே கொடுக்கப்பட்டுள்ளதைப் போன்ற மாதிரியொன்றைப் பயன்படுத்துக.

**(ரூ.'000)**

| கொடுக்கல் வாங்கல்கள் | சொத்துக்கள் | | | | பொறுப்புக்கள் | | உரிமையாண்மை |
|---|---|---|---|---|---|---|---|
| | உபகரணங்கள் | இருப்பு | வியாபார வருமதிகள் | காசு | வியாபாரக் கொடுக்குமதிகள் | சென்மதி செலவுகள் | |
| 1 | | | | | | | |
| 2 | | | | | | | |
| . | | | | | | | |
| . | | | | | | | |
| . | | | | | | | |
| 12 | | | | | | | |
| மீதி | | | | | | | |

(2) 30.04.2021 இல் உள்ளவாறு காசுக்கணக்கின் திருத்திய மீதி

(3) 2021 ஏப்ரல் மாதத்துக்கான வங்கி இணக்கக்கூற்று

(4) 30.04.2021 இல் முடிவடைந்த மாதத்துக்கான வருமானக்கூற்று

**(மொத்தம் 40 புள்ளிகள்)**

4. (அ) கமல் PLC ஆனது உள்ளூர் சந்தைக்கு மின்சாரப் பொருட்களை உற்பத்தி செய்வதற்காக உயர் செயற்றிறனுடைய இயந்திரம் ஒன்றைக் கொள்வனவு செய்ய விரும்புகின்றது. இந்த இயந்திரத்தின் மதிப்பிடப்பட்ட விலை ரூ. 6 500 000 ஆகும். மேலும், மதிப்பிடப்பட்ட இயந்திரத்தைக் கொண்டு செல்வதற்கான கிரயமும் நிறுவுதற் கிரயமும் முறையே ரூ. 50 000 மற்றும் ரூ. 200 000 ஆகும். இயந்திரத்தின் பயன்தரு ஆயுட்காலம் 6 வருடங்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது. இச்செயற்றிட்டத்திற்கு ஆரம்பத்தில் தேவைப்படும் தொழிற்படு மூலதனம் ரூ. 550 000 ஆக மதிப்பிடப்பட்டுள்ளதுடன், இது செயற்றிட்டத்தின் இறுதி வருடத்தில் மீளப்பெறப்பட முடியும். இயந்திரத்தின் மதிப்பிடப்பட்ட எஞ்சிய பெறுமதி செயற்றிட்டத்தின் இறுதியில் ரூ. 750 000 ஆகும். இச்செயற்றிட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட வரிக்குப் பின்னரான வருடாந்த இலாபமும் தேவைப்படும் திரும்பல் வீதம் 12% இல் கழிவுக் காரணிகளும் பின்வருமாறு :

| வருடம் | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
|---|---|---|---|---|---|---|
| வரிக்குப் பின்னரான வருடாந்த இலாபம் (ரூ.'000) | 550 | 800 | 950 | 1 250 | 1 050 | 750 |
| 12% இல் கழிவுக்காரணி (கிட்டிய இரு தசம தானங்களில்) | 0.89 | 0.79 | 0.71 | 0.64 | 0.57 | 0.51 |

**வேண்டப்படுவது:**

(1) செயற்றிட்டத்தின் ஆரம்பக் காசு வெளிப்பாய்ச்சல்

(2) செயற்றிட்டத்தின் ஒவ்வொரு வருடத்துக்குமான காசு உட்பாய்ச்சல்கள்

(3) செயற்றிட்டத்தின் தேறிய நிகழ்காலப் பெறுமதி (NPV)

(4) தேறிய நிகழ்காலப் பெறுமதி அடிப்படையில் செயற்றிட்டத்தில் முதலீடு செய்வதற்கான சிபார்சு

**(10 புள்ளிகள்)**

01030000032011327 5

(ஆ) நுவரெலியா மாவட்டத்தில் அமைந்துள்ள சரோஜா தனியார் கம்பனியானது மரக்கறிகள் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளது. இக்கம்பனி பெறுமதிசேர் வரிக்காகப் (VAT) பதிவுசெய்யப்பட்டுள்ளது.
பின்வரும் மீதிகள் 01.01.2021 இலுள்ளவாறான பேரேட்டிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டவையாகும்.

| | ரூ.'000 |
|---|---|
| காசு | 100 |
| வியாபாரக் கடன்பட்டோர் | 150 |
| வியாபாரக் கடன்கொடுத்தோர் | 250 |
| VAT கட்டுப்பாட்டுக் கணக்கு (செலவு) | 20 |

மேற்படி வியாபாரக் கடன்பட்டோர் மீதிகளைக் கொடுத்துத் தீர்ப்பதற்கு 20.01.2021 இல் காசு பெறப்பட்டுள்ளது. மேலும், கம்பனி மேலேயுள்ள எல்லா நிலுவைகளையும் VAT மீதிகளையும் 31.01.2021 இல் கொடுத்துத் தீர்த்துள்ளது.

பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் 2021 ஜனவரி மாதத்துடன் தொடர்புடையவையாகும்.

**விற்பனைகளும் வியாபாரக் கடன்பட்டோரும் :**

இக்கம்பனியானது மனிங் சந்தையிலுள்ள (Manning Market) மொத்த வியாபாரிகளுக்கு 30 நாட்கள் கடன் தவணையுடன் மரக்கறிகளைக் கடனுக்கு விற்பனை செய்கின்றது. 15 நாட்களுக்குள் முழுத்தொகையும் செலுத்தப்படுமாயின் VAT நீங்கலாக விற்பனை விலையில் 10% கழிவு அனுமதிக்கப்படும்.

31.01.2021 இல் முடிவடைந்த மாதத்துக்கான விற்பனை நாளேட்டிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட தகவல்கள்:

| | விற்பனைகள் (ரூ.'000) | 8% VAT (ரூ.'000) |
|---|---|---|
| சுதன் | 600 | 48 |
| அமிலன் | 400 | 32 |
| பிரபா | 800 | 64 |
| மொத்தம் | 1 800 | 144 |

சுதன், அமிலன் ஆகிய இருவரும் முழுத்தொகையையும் 15 நாட்களுக்குள் செலுத்தி இருந்தனர். எனினும் பிரபா ரூ. 600 000 ஐ மட்டும் செலுத்தியிருந்தார்.
இக்கம்பனி மரக்கறி விற்பனை நிலையமொன்றை நுவரெலியாவிலும் கொண்டுள்ளது. அங்கு எல்லா விற்பனைகளும் மொத்த வியாபாரிகளுக்கு காசிற்கு மேற்கொள்ளப்படுகின்றன. இம்மாதத்துக்கான காசு விற்பனைகள் 8% பெறுமதிசேர் வரி (VAT) உள்ளடங்களாக ரூ. 324 000 ஆகும்.

**கொள்வனவுகளும் கடன்கொடுத்தோரும் :**

இக்கம்பனி சிறிய அளவு விவசாயிகளிடமிருந்து காசுக்கும் பேரளவு மரக்கறி விநியோகத்தரான நடேஷ் வியாபாரத்திடமிருந்து கடனுக்கும் மரக்கறிகளைக் கொள்வனவு செய்கின்றது.
இம்மாதத்தில் நடேஷ் வியாபாரத்திடமிருந்து மேற்கொள்ளப்பட்ட கடன் கொள்வனவானது 8% VAT உள்ளடங்கலாக ரூ. 756 000 ஆகும்.

கம்பனியானது நடேஷ் வியாபாரத்துக்கு ரூ. 5 000 கழிவு கழித்த பின் ரூ. 600 000 ஐச் செலுத்தி அவருக்குச் செலுத்த வேண்டிய ரூ. 605 000 இனைத் தீர்த்துள்ளது.

சிறிய அளவு விவசாயிகளிடமிருந்து ரூ. 500 000 இற்குக் காசுக்குக் கொள்வனவு செய்யப்பட்டது. இக்கொள்வனவுகளுக்குப் பெறுமதிசேர் வரி (VAT) பொருத்தமற்றதாகும்.

**செலவுகளும் ஏனைய வருமானமும் :**

இம்மாதத்தில் செலுத்தப்பட்ட செயற்பாட்டுச் செலவுகள் ரூ. 198 000 ஆகும்.
கம்பனி மரக்கறிகளை மனிங் சந்தைக்கு அனுப்புவதற்கு மொத்த வியாபாரிகளிடமிருந்து ரூ. 54 000 அறவிட்டுள்ளது.
செயற்பாட்டுச் செலவுகள் மற்றும் ஏனைய வருமானம் ஆகிய இரண்டுக்கும் பெறுமதிசேர் வரி (VAT) பொருத்தமற்றது.

**வரைபு இலாபம் :**

31.01.2021 இல் முடிவடைந்த மாதத்துக்கான வரைபு இலாபம் ரூ. 856 000 ஆக இருந்தது. பின்னர் மேற்கொள்ளப்பட்ட பரிசீலனையில் பின்வரும் வழுக்கள் வெளிப்படுத்தப்பட்டன.

- பெற்ற கழிவு, கொடுத்த கழிவுக் கணக்கு மீதிகள் இலாபக் கணிப்பீட்டிலிருந்து விடுபட்டிருந்தன.
- செலுத்திய செயற்பாட்டுச் செலவுகள் காசுக் கொடுப்பனவு நாளேட்டில் சரியாகப் பதியப்பட்டிருந்த போதிலும், அது செயற்பாட்டுச் செலவுக் கணக்கில் ரூ. 98 000 ஆகப் பதியப்பட்டிருந்தது.

**வேண்டப்படுவது:**

(1) 31.01.2021 இல் முடிவடைந்த மாதத்துக்கான பின்வரும் மூலப் பதிவேடுகளும் பேரேட்டுக் கணக்குகளும்:
 (i) காசுப் பெறுவனவு நாளேடு
 (ii) காசுக் கொடுப்பனவு நாளேடு
 (iii) காசுக் கணக்கு
 (iv) கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு
 (v) VAT கட்டுப்பாட்டுக் கணக்கு

(2) வழுக்களைத் திருத்துவதற்கான நாட்குறிப்புப் பதிவுகள் (விளம்பலுடன்)

(3) 31.01.2021 இல் முடிவடைந்த மாதத்துக்கான இலாபத்தைத் திருத்துவதற்கான கூற்று

**(30 புள்ளிகள்)**
**(மொத்தம் 40 புள்ளிகள்)**

[பக். 7 ஐப் பார்க்க

5. (அ) லறோயன், ரவி, பிரியா ஆகிய மூவரும் பங்குடமையொன்றை நடாத்தி வந்தனர். பங்குடமை உடன்படிக்கையின் ஏற்பாடுகள் பின்வருமாறு இருந்தன.

- லறோயன், ரவி, பிரியா ஆகிய மூவரும் இலாபநட்டங்களை முறையே 5:3:2 என்ற விகிதத்தில் பகிர்வர்.
- ஒவ்வொரு பங்காளரும் மாதாந்தச் சம்பளமாக ரூ. 50 000 இற்கு உரித்துடையவராவார்.
- ஒவ்வொரு பங்காளரும் வருடத்தின் ஆரம்பத்திலுள்ள மூலதன மீதியின் மீது 10% வருடாந்த வட்டிக்கு உரித்துடையவராவார்.
- நன்மதிப்புடன் தொடர்புடைய எல்லாச் சீராக்கங்களும் பங்காளர் மூலதனக் கணக்குகளினூடாக மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

31.03.2021 இல் உள்ளவாறு பங்குடமையின் பரீட்சைமீதி பின்வருமாறு:

| விபரம் | வரவு (ரூ.'000) | செலவு (ரூ.'000) |
|---|---|---|
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் (கொண்டுசெல் தொகை)..... | 14 250 | |
| முதலீடுகள் ........ | 1 200 | |
| விற்பனைகள் ........ | | 12 000 |
| விற்பனைக் கிரயம் ........ | 4 000 | |
| செயற்பாட்டுச் செலவுகள் (பெறுமானத்தேய்வு உட்பட) ........ | 3 500 | |
| காசு ........ | 380 | |
| 31.03.2021 இல் இருப்பு ........ | 1 500 | |
| கடன்கொடுத்தோர் ........ | | 1 700 |
| 01.04.2020 இல் மூலதனக் கணக்குகள்: | | |
| லறோயன் ........ | | 4 000 |
| ரவி ........ | | 3 000 |
| பிரியா ........ | | 2 000 |
| 01.04.2020 இல் நடைமுறைக் கணக்குகள் : | | |
| லறோயன் ........ | | 100 |
| ரவி ........ | | 90 |
| பிரியா ........ | 60 | |
| கடன் கணக்கு - லறோயன் ........ | | 2 000 |
| | **24 890** | **24 890** |

**மேலதிக தகவல்கள்:**

(i) இவ்வருடத்தில் பங்காளர்களால் பெறப்பட்ட சம்பளங்களும் பற்றிய பொருட்களும் பின்வருமாறு.

| பங்காளர் | பெறப்பட்ட சம்பளங்கள் (ரூ.'000) | பற்றிய பொருட்கள் - கிரயத்தில் (ரூ.'000) |
|---|---|---|
| லறோயன் | 500 | 80 |
| ரவி | 400 | 20 |
| பிரியா | 300 | – |

பங்காளர்களுக்குச் செலுத்தப்பட்ட சம்பளங்கள் செயற்பாட்டுச் செலவுகளுள் பதியப்பட்டுள்ளன. பற்றிய பொருட்கள் கணக்குப் புத்தகங்களில் பதிவுசெய்யப்படவில்லை. 31.03.2021 இல் உள்ள இருப்பின் கிரயமானது பௌதீகக் கணக்கீட்டின் அடிப்படையில் மதிப்பிடப்பட்டுள்ளது.

(ii) பரீட்சைமீதியில் காட்டப்பட்டுள்ள கடனானது லறோயனினால் 01.04.2020 இல் வழங்கப்பட்டுள்ளது. இக்கடன் மீதான வட்டி செலுத்தப்படவோ அல்லது கணக்கீடு செய்யப்படவோ இல்லை.

(iii) இவ்வருடத்தில் ரவி தனது சொந்தக் காசிலிருந்து ரூ. 20 000 ஐப் பங்குடமையின் கடன்கொடுத்தோர் ஒருவருக்குச் செலுத்தியுள்ள போதிலும், இது கணக்குப் புத்தகங்களில் பதிவுசெய்யப்பட்டிருக்கவில்லை.

[பக். 8 ஐப் பார்க்க

(iv) 31.03.2021 இல் ரவி பங்குடமையிலிருந்து இளைப்பாறினார். இத்திகதியில் வணிகத்தின் நன்மதிப்பானது ரூ. 1 500 000 ஆக மதிப்பிடப்பட்டிருந்தது. லறோயனும் பிரியாவும் இலாபநட்டங்களை முறையே 3:2 விகிதத்தில் பகிர்ந்து கொண்டு பங்குடமையைத் தொடர்ந்து நடாத்த இணங்கினர்.

(v) ரவிக்குச் செலுத்த வேண்டிய தொகையைப் பின்வருமாறு செலுத்துவதற்கு இணங்கியுள்ளனர்.

- முதலீட்டின் உடமையை மாற்றுதல்
- அலுவலக உபகரணமொன்றை அதன் கொண்டுசெல் தொகையான ரூ. 300 000 இற்குக் கொடுத்தல்
- மிகுதித் தொகையைச் செலுத்த வேண்டிய கடனொன்றாகக் கருதுதல்

மேற்குறிப்பிடப்பட்ட சீராக்கங்கள் ரவியின் மூலதனக் கணக்கினூடாக மேற்கொள்ளப்படல் வேண்டும்.

**வேண்டப்படுவது:**

(1) 31.03.2021 இல் முடிவடைந்த வருடத்துக்கான பங்குடமையின் வருமானக்கூற்று (பங்காளர்களுக்கான பகிர்வுகள் உட்பட)

(2) 31.03.2021 இல் முடிவடைந்த வருடத்துக்கான பங்காளர்களின் மூலதனக் கணக்குகளும் நடைமுறைக் கணக்குகளும்

(3) 31.03.2021 இல் ரவிக்குச் செலுத்த வேண்டிய கடனின் தொகை

**(20 புள்ளிகள்)**

(ஆ) சாரங்கன் PLC இன் நிதிக் கூற்றுக்களிலிருந்து பின்வரும் தகவல்கள் பிரித்தெடுக்கப்பட்டுள்ளன.

| **31.03.2021 இல் முடிவடைந்த வருடத்திற்கானது :** | **ரூ.'000** |
|---|---|
| விற்பனைகள் ..................................................... | 25 000 |
| விற்பனைக் கிரயம் .......................................... | 15 000 |
| ஏனைய வருமானம் ............................................ | 1 200 |
| செயற்பாட்டுச் செலவுகள் ................................. | 4 500 |
| நிதிச் செலவுகள் ................................................ | 1 500 |
| வரிக்கு முன்னரான இலாபம் ............................ | 5 200 |
| வருமானவரிச் செலவுகள்.................................... | 1 000 |

| **சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் சிலவற்றின் மீதிகள்:** | **31.03.2021 இல் (ரூ.'000)** | **31.03.2020 இல் (ரூ.'000)** |
|---|---|---|
| இருப்புக்கள் ........................................................................ | 2 400 | 1 800 |
| வியாபார வருமதிகள் ......................................................... | 5 200 | 6 000 |
| வியாபாரக் கொடுக்குமதிகள் ............................................... | 3 500 | 4 250 |
| முற்பணமாகச் செலுத்திய செயற்பாட்டுச் செலவுகள் ............... | 500 | 200 |
| சென்மதி வட்டிச் செலவு ....................................................... | 400 | 650 |
| செலுத்தவேண்டிய வருமானவரி ............................................ | 300 | 450 |
| 5 வருட நிலையான வைப்புக்களிலிருந்து பெறவேண்டிய வட்டி .. | 400 | – |

**மேலதிக தகவல்கள்:**

(i) அனைத்து கொள்வனவுகளும் விற்பனைகளும் கடன் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றன.

(ii) நிதிச் செலவுகள் தனியே வட்டிச் செலவுகளை உள்ளடக்கியுள்ளதுடன் அவை செயற்பாட்டு நடவடிக்கைகளுடன் தொடர்புடையவையாகும்.

(iii) செயற்பாட்டுச் செலவுகள், ரூ. 1 800 000 பெறுமானத்தேய்வை உள்ளடக்கியுள்ளது.

(iv) ஏனைய வருமானங்கள் பின்வரும் விடயங்களை உள்ளடக்கியுள்ளன.

– மோட்டார் வாகன விற்பனையிலிருந்தான வருமானம் ரூ. 800 000

– 5 வருட நிலையான வைப்பு ஒன்றிலிருந்து பெறவேண்டிய வட்டி ரூ. 400 000

**வேண்டப்படுவது:**

LKAS 7 (காசுப்பாய்ச்சல் கூற்று) இன்படி பின்வரும் ஒவ்வொரு முறையின் படி 31.03.2021 இல் முடிவடையும் வருடத்திற்கான செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்கள்

(1) நேர் முறை

(2) நேரில் முறை

**(20 புள்ளிகள்)**
**(மொத்தம் 40 புள்ளிகள்)**

[பக். 9 ஐப் பார்க்க

**6.** (அ) பாடசாலையொன்றின் அபிவிருத்திச் சங்கமானது ஒரு அணியில் 6 பேர் கொண்ட கிறிக்கட் போட்டியொன்றினை சங்கத்திற்கு நிதி திரட்டுவதற்காக நடத்துவதற்குத் தீர்மானித்துள்ளது. போட்டியிலிருந்து எதிர்பார்க்கப்படும் வருவாய் மற்றும் கிரயங்கள் பின்வருமாறு:

| | ரூ. |
|---|---|
| அணியொன்றிடமிருந்து அறவிடப்படும் அனுமதிக்கட்டணம் ...................... | 10 000 |
| அணியொன்றுக்கான உணவு மற்றும் குடிபானக் கிரயம் ........................ | 4 000 |
| நடுவர்களுக்கான கட்டணங்கள் ........................................................................ | 15 000 |
| விருதுகள், சான்றிதழ்களுக்கான கிரயம் ................................................ | 50 000 |
| விளையாட்டு உபகரண வாடகைக் கட்டணங்கள் ...................................... | 25 000 |
| இசைக்குழுவுக்கான கட்டணங்கள் ......................................................... | 8 000 |
| ஏற்பாட்டுக்குழுவிற்கான உணவு மற்றும் குடிபானக் கிரயம் ...................... | 12 000 |
| அணியொன்றுக்கு சுத்தப்படுத்தும் பொதியொன்றுக்கான கிரயம் .............. | 1 000 |

போட்டியில் ஆகக்குறைந்தது 35 அணிகள் பங்குபற்றுமாயின் பாடசாலையின் பழைய மாணவர் சங்கமானது ரூ. 60 000 ஐ உபயமாக வழங்குவதற்கு இணங்கியுள்ளது.

**வேண்டப்படுவது:**

போட்டிக்கான பின்வருவன :

(1) அணியொன்றிற்கான மாறும் கிரயம்

(2) போட்டிக்கான மொத்த நிலையான கிரயம்

(3) அணியொன்றிற்கான பங்களிப்பு

(4) போட்டிக்கான மொத்தக் கிரயத்தினை ஈடுசெய்வதற்குத் தேவையான அணிகளின் எண்ணிக்கை

(5) ரூ. 40 000 இனை மிகையாகப் பெறுவதற்குத் தேவையான அணிகளின் எண்ணிக்கை

(6) 35 அணிகள் பங்குபற்றுமாயின் போட்டியிலிருந்து எதிர்பார்க்கப்படும் மிகை

**(20 புள்ளிகள்)**

(ஆ) பின்வரும் தகவல்கள் 31.03.2021 இல் முடிவடைந்த வருடத்துக்குத் தயாரிக்கப்பட்ட நிமலன் PLC இன் நிதிக்கூற்றுக்களில் இருந்து பிரித்தெடுக்கப்பட்டவையாகும்.

| | ரூ.'000 |
|---|---|
| **31.03.2021 இல் முடிவடைந்த வருடத்துக்கானது :** | |
| மொத்த இலாபம் ........................................................ | 30 000 |
| செயற்பாட்டுச் செலவுகள் ............................................ | 12 000 |
| வட்டிச் செலவுகள் ..................................................... | 6 000 |
| வரிச் செலவுகள் ........................................................ | 3 000 |
| **31.03.2021 இல் உள்ளவாறு :** | |
| இருப்பு ....................................................................... | 21 500 |
| கடன்பட்டோர் ............................................................ | 17 500 |
| முற்பணச் செலவுகள் ................................................... | 7 500 |
| காசு ........................................................................... | 11 500 |
| நீண்டகாலக் கடன் ....................................................... | 54 000 |
| நடைமுறைப் பொறுப்புக்கள் ......................................... | 29 000 |

**மேலதிக தகவல்கள்:**

(i) 31.03.2021 இல் முடிவடைந்த வருடத்துக்கான கம்பனியின் மொத்த இலாப வீதம் 25% ஆகவும் 31.03.2021 இல் உள்ளவாறு நடைமுறை விகிதம் 2:1 ஆகவும் இருந்தன.

(ii) 31.03.2020 இல் உள்ளவாறான இருப்பு ரூ. 18 500 000 ஆக இருந்தது.

(iii) எல்லா விற்பனைகளும் கடனுக்கு மேற்கொள்ளப்பட்டதுடன் 31.03.2020 இல் உள்ளவாறான கடன்பட்டோர் மீதி ரூ. 22 500 000 ஆக இருந்தது.

(iv) 31.03.2020 இல் உள்ளவாறான கூறப்பட்ட சாதாரண பங்கு மூலதனம் மற்றும் ஒதுக்கங்களின் மீதி ரூ. 81 000 000 ஆக இருந்தது.

[பக். 10 ஐப் பார்க்க

(v) வருடத்துக்கான இலாபம் மட்டுமே வருட இறுதியிலுள்ள உரிமையாண்மை மீதான மாற்றத்துக்குப் பங்களிப்புச் செய்துள்ளது.

(vi) வருடத்துக்கான வேலைநாட்களின் எண்ணிக்கை 360 எனக் கருதுக.

**வேண்டப்படுவது:**

(1) தேறிய இலாப விகிதம்
(2) விரைவுச் சொத்து விகிதம்
(3) கடன்பட்டோர் சேகரிப்புக்காலம்
(4) இருப்புப் புரள்வு விகிதம்
(5) கடன் - உரிமையாண்மை விகிதம்

**(10 புள்ளிகள்)**

(இ) BRS விளையாட்டுக் கழகமானது 01.01.2020 இல் 165 அங்கத்தவர்களைக் கொண்டிருந்தது. அங்கத்தவர் ஒருவருக்கான வருடாந்த சந்தா ரூ. 6 000 ஆகும்.

31.12.2020 இல் முடிவடைந்த வருடத்திற்கான அங்கத்தவர் சந்தா தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

- இவ் வருடத்தில் 25 புதிய அங்கத்தவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், அவர்கள் இரண்டு வருடங்களுக்கான வருடச்சந்தாவை ஒரே தடவையில் செலுத்தி இருந்தனர்.
- 01.01.2020 இல் 15 அங்கத்தவர்களிடமிருந்து வருட சந்தா பெறவேண்டியிருந்தது. இவர்களுள் 10 அங்கத்தவர்களின் அங்கத்துவம், முன்னைய வருடத்திற்கான நிலுவைச் சந்தாவையும், 31.12.2020 இல் முடிவடையும் நடைமுறை வருடத்திற்கான சந்தாவையும் செலுத்தாத காரணத்தால் இரத்துச் செய்யப்பட்டது. மிகுதி 05 அங்கத்தவர்களும் தமது நிலுவைச் சந்தாவையும் நடைமுறை வருடத்திற்கான சந்தாவையும் செலுத்தியிருந்தனர்.
- 12 அங்கத்தவர்கள் நடைமுறை வருடத்திற்கான சந்தாவைச் செலுத்தவில்லை.

பின்வரும் தகவல்கள் 31.12.2020 இல் முடிவடைந்த வருடத்துக்கான விளையாட்டுக் கழகத்தின் பெறுவனவுகள், கொடுப்பனவுகள் கணக்கிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டவையாகும்.

| பெறுவனவுகள் | ரூ.'000 | கொடுப்பனவுகள் | ரூ.'000 |
|---|---|---|---|
| பெற்ற சந்தா | ? | பயிற்றுநர் படி (allowance) | 1 150 |
| பெற்ற நன்கொடை | 1 200 | விளையாட்டு உபகரணக் கொள்வனவு | 400 |
| விளையாட்டு நிகழ்வுகளிலிருந்து பெற்ற வருமானம் | 790 | அலுவலகச் செலவுகள் | 550 |

விளையாட்டுக் கழகத்தின் சில சொத்துக்களும் பொறுப்புக்களும் பின்வருமாறு இருந்தன:

| விபரம் | 31.12.2020 இல் (ரூ.'000) | 31.12.2019 இல் (ரூ.'000) |
|---|---|---|
| விளையாட்டு மைதானம் .......................................... | 5 500 | 5 500 |
| விளையாட்டு உபகரணம் (கொண்டுசெல் தொகை) ........ | 1 600 | 1 500 |
| செலுத்தவேண்டிய அலுவலகச் செலவுகள் ................ | 70 | 100 |
| பெறவேண்டிய சந்தா ................................................ | ? | 90 |
| முற்பணமாகப் பெற்ற சந்தா ..................................... | ? | — |

**மேலதிக தகவல்கள்:**

நன்கொடைகளை அவை பெறப்பட்ட வருடத்திலிருந்து ஆரம்பித்து ஐந்து வருடங்களுக்கு வருமானமாக இனங்காணுவது விளையாட்டுக் கழகத்தின் கொள்கையாகும்.

**வேண்டப்படுவது :**

(1) 31.12.2020 இல் முடிவடையும் வருடத்துக்கான சந்தாக் கணக்கு
(2) 31.12.2020 இல் முடிவடையும் வருடத்துக்கான வருமானக் கூற்று

**(10 புள்ளிகள்)**
**(மொத்தம் 40 புள்ளிகள்)**

* * *

0002566